சைவ பரிபாலன சபை வெளியீடு

செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

விலை:- ரூபா 12

# இந்து சாதனம்

(HINDU-ORGAN)

சிவமயம்

புத்தகம் : 114 | சுபானுவருஷம் சித்திரை-ஆவணி - 2003 | இதழ் : 1,2,3

## பாதை.... உபாதை.... புதியபாதை!

ஏ-9 - பாதை திறந்தது. மகிழ்ச்சியோ மகிழ்ச்சி! புயலென பேரூந்துகள் வேகம் - பெருந்திரளான மக்கள் வெள்ளம்.

நாடும் நாமும் கண்டதென்ன? கொழும்பிலும் பார்க்க பொருட்களின் விலை யாழ்ப்பாணத்தில் - குறைவு! அப்பாடா - என்ன நிம்மதி. நிம்மதியா? போயேபோச்சு! திறந்தசந்தையில் ஆடம்பரப்பொருட்களின் குவியல் கையிலுள்ள காசெல்லாம் நதியாகப் பாய்ந்து தென்னகம் செல்கிறது. தேவையில்லாத ஆடம்பரத் தேவைகள் நிறைவேறுகின்றன. இலாபம் அடைவது யார்? கொழும்பின் கொழுத்த இலாபம் திரட்டும் வியாபாரிகளே!

இது போனால் போகட்டும்.... எமது சொந்த மண்ணில் நடப்பதென்ன? கல்வித் தரத்தில் வீழ்ச்சி. சீ, சீ! வீழ்ச்சியில்லை, பின்னடைவுதான். இளைஞர்களிடையே கலாச்சாரச்சீரழிவு. இளைஞர்களிடம் மாத்திரம்தானா? வயது போனவர்களும் தான்!! ஒட்டுமொத்தமாக மொத்த தமிழ்ச் சமூகமும் 'பேயாட்டம்' போடுகின்றது. இவற்றையெல்லாம் நன்கு சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்தால் என்ன தெரிகின்றது.... தெளிவாகின்றது?

ஆயிரக்கணக்கான இலட்சிய தமிழ் இளைஞர்கள் தன்னிகரில்லாத தலைவர் பாதையில் 'தமிழ் எங்கள் உயிர்' எனச் சீறியெழுந்து செய்த சாதனைகள் பல! உலகமே வியக்க - வரலாறேபோற்ற - இலட்சியப் பாதையில் வீறுநடைபோட்டு வந்த வீரர்கள்.... அவர்கள் வாழும் மண்ணிலா இந்த அநீதிகள்? நம்ப முடியவில்லை ஆனால், நம்பித்தான் ஆகவேண்டும் தினசரிப் பத்திரிகைகளில் நாளாந்தம் - களவு - கொலை - கொள்ளை வழிப்பறி. பாலியல் பலாத்காரம்... இதுவா புதிய வாழ்வு?

எமது வாழ்க்கை முறையில் விரும்பத்தகாத மாற்றங்கள் நீதி - நியாயம் - நேர்மை - நாணயம் இவையெல்லாம் கடந்தகாலம். அநீதி - அநியாயம் - மோசடி இன்றைய மோசமான நிலமை. மாற்று மருந்தென்ன....? அறவாழ்வு தான் அறிவு வாழ்வு. இல்லத்திலும் கல்விச் சாலைகளிலும் பண்பாடு போற்றப்பட வேண்டும். ஆசிரியப் பெருந்தகைகள் எண்ணித் துணிய வேண்டும். ஏணிப்படிகளே! எழுந்து நில்லுங்கள். உங்களால் நிச்சயம் முடியும். ஏனிந்த தயக்கம்?

சமூகம் தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கக்கூடாது. தட்டிக் கேட்காததினால்தான் தடுமாறுகின்றது எமது சமூகம். எதிர்க்கவும் - அநியாயத்தைத் தட்டிக் கேட்கவும் - ஏன் மறுக்கின்றோம்? பாதகம் செய்பவரைக் கண்டால் மோதி மிதித்து விடுபாப்பா என்று பாடினான் பாரதி. அச்சமில்லை! அச்சமில்லை! என்று புரட்சிக் குரல் கொடுத்தான் பாரதி.

சமநீதி சமத்துவம் என்பன பேணப்படவேண்டும். சுதந்திரம் எமது உயிர் நாடி அறவாழ்வு எமது உயிர் மூச்சு. இதனை நன்குணர்ந்த நமது தலைவர் காட்டிய பாதையில் - அவர் தலைமையில் - புதிய பாதையில் செல்வோம்.!

தியாகி திலீபன் - தமிழ்மக்களின் நெஞ்சம் கவர்ந்த இளைஞன். அவனது நினைவுக் காலத்தில் - துணிந்து எழுவோம்.

மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.

**மக்கள் மனமாற்றம்**
**~ வரவேண்டும்.**
**சைவசிந்தனை**
**~ மேலோங்க வேண்டும்.**





பிரதம விருந்தினர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் கௌரவிக்கப்படுகிறார்.

சைவப்பெரியார் க.சிராமலிங்கம் அவர்களுக்கு சபையின் செயலாளர் அ.சேனாதிராசா மாலையிட்டு அவரிடம் ஆசிபெறுகின்றார்.

# சைவநெறித் தேர்வில் தங்கப்பதக்கம் பெறுவோர்











## தொடரட்டும் இவர்கள் சைவப் பணி!

சைவ நெறித் தேர்வுகளை பல வருடங்களாக நடத்தி வருபவர்கள் சபையின் பரீட்சைப் பகுதியினரே. பரீட்சைப் பகுதியின் அச்சாணியாக - திகழ்பவர் - சைவநெறிச் செம்மல் - சைவப்புலவர் வ.கந்தசாமி அவர்கள். அவர் பரீட்சை செயலாளராக கடமை செய்கின்றார். கடமையே கண்ணாகக் கொண்டு அருந்தொண்டாற்றி வருகின்றார்.எமது செயலாளர் திரு.அ.சேனாதிராசா உப செயலாளர் திரு.தி.மாணிக்கவாசகர் ஆகியோர் இப்பரீட்சையை நடத்துவதற்கும் ஏனைய போட்டிகளை நடத்துவதற்கும் உறுதுணையாக இருந்து வருகின்றார்கள்.

எமது விழாக்களைச் சிறப்புற நடத்தும் இவர்களின் சைவப் பணியை என்னவார்த்தைகள் கொண்டு போற்றலாம். எமது சபையின் உயிர் மூச்சு இவர்கள் தான். இவர்கள் எம்பெருமான் அருள் பெற்றுத் தொடர்ந்தும் சைவப் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

நன்றியுடன்:

சுடர் இ.மகேந்திரன் (தலைவர்)



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்து சாதனம்
(HINDU ORGAN)
சுபானுவருஷம் சித்திரை - ஆவணி [17-09-2003]

# கோபுரங்கள் உயர்கின்றன! – மட்டற்ற மகிழ்ச்சி. வர்ணங்கள் ஜொலிக்கின்றன! – அற்புதமான காட்சி!

ஆனால் ...............
சைவப்பெருமக்களே
சிந்திக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.
மக்கள் மதம் மாறுகின்றார்கள் இல்லை இல்லை மாற்றப்படுகிறார்கள்!

-

பெரும்கூக்குரல்!
ஏன் மாறுகின்றார்கள்.........?
சிந்திக்கவேண்டாமா?

கலைஞர் கருணாநிதியின் பிரபலமான வாசகங்கள் நினைவிற்கு வருகின்றன. உயர்ந்த கோபுரங்கள், தாழ்ந்த உள்ளங்கள்! எத்தனை உண்மை! குடிசைகள் போடக்கூட வழியில்லை. மழைபெய்தால் .......... வேறு கதையே வேண்டாம். அகதிகள் முகாம்களின் அவலக்கதி சொல்லவே வேண்டாம். சொல்வதினால் தான் என்ன பயன்? ஆனால் சொல்வதில் என்ன பயம்? இலட்சக்கணக்காக, கோடிக்கணக்காக கொட்டிக்கொட்டி கோபுரம் கட்டும்போது அதில் ஒரு சிறுபகுதியை ஏதிலிகளுக்கு வழங்கவேண்டும் என்ற சிவசிந்தனை தோன்றவில்லையே. எனவே சிவநிந்தனையும் எமக்குக் கேட்கவில்லைபோலும். மதம்மாறுவதைச் சட்டம் போட்டு தட்டிக்கேட்கவேண்டியது நியாயமே! இந்தக் கோணத்தில் எமது மதிப்பிற்குரிய இந்துகலாசார அமைச்சர் மகேஸ்வரன் மதிப்பிற்குரியவராகின்றார்.

ஆனால், உண்மைக்காரணத்தை நாம் ஏன் கண்டறிய மறுக்கின்றோம்? புதிய யுகம் படைக்க வேண்டும் என்ற புதிய வேகம் எம்மிடம் ஏன் இல்லை? 'இல்லை' என்ற சொல்லை "இல்லை" என்றே செய்வோம் - துணிவோமா? "சிவத்தொண்டு" - சிவனின் பெயரால் சீவியத்திற்கே கஸ்டப்படும் ஏழைகளுக்கு செய்யப்படும் தொண்டு என்பதை ஏற்போம், செயற்படுவோம்.

### மனமாற்றம் தேவை

"பகுத்துண்டு பல்லுயர் ஓம்புதல்" என்ற இலட்சியத்தை இதய கீதமாகக்கொண்டு செயற்பட வேண்டும். இது நிறைவேறுமா?

### ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

எம்மிடையே உயர்ந்த எண்ணங்களும் தூயசிந்தனையும் குறைந்து வருகின்றதா? கோபுரங்கள் உயருகின்றன. ஒழுக்கம் சரிகின்றதா? ஆயிரக்கணக்கான இளைஞர்களின் தூய உயிர்த்தியாகத்தினால் உரமேறிய எமது தமிழ்நாட்டில் ஒழுக்கக்குறைவா? எப்படிப் புகுந்தது? எப்படி விரட்டுவது? தகப்பனே மகனை வெட்டிய கொடூரம் - பேசவே கூசும் பாலியற் குற்றங்கள் - மகன்களை மதுவிடம் பறிகொடுக்கும் மாதாக்களின் ஓலக்குரல் - எங்கே ஓடுகின்றோம்? "என்று தணியுமிந்த சுதந்திரதாகம்?" என்று பாட வேண்டிய நாம் - "என்று தணியுமிந்த கொடூரம்?" என்றல்லவா கூக்குரல் போடவேண்டியுள்ளது. பார்புகழும் பிரபாகரன் தலைமையில் வாழும் பெருமை கொண்ட நாம் அவரது தூய இலட்சியங்களை உணர்ந்து செயற்பட்டால் தொலையும் இந்த தொல்லைகள். ஒழுக்கநெறியை, அறநெறியை வளர்க்க வேண்டியவர்கள் யார்? பெற்றோர்கள், ஆசிரியர்கள். பாடசாலைகளே கிராமங்களின் இதயம். கிராமங்களே தேசத்தின் உயிர்நாடி. எனவே கிராமப்புற பாடசாலைகள் புறக்கணிக்கப்படாமல் போற்றப்படவேண்டும். சிறந்த ஆசிரியர்கள் பின் தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று கற்பிக்க முன்வரவேண்டும். நகரப் பாடசாலைகளுக்கு அலைமோதும் போக்கு மாற்றப்படவேண்டும். நல்ல அதிபர்களும், ஆசிரியர்களும் இத்தகைய தியாக சேவைக்கு உட்பட்டு நமது மாணவர்களுக்கு ஊக்கம் கொடுப்பார்களா? சிறந்த கல்விசார் பணிப்பாளர்களும் உத்தியோகத்தர்களும் இந்த அரும் பணியில் முன்நிற்கவேண்டும்.

### இது வெளிநாட்டுத் தமிழர்களுக்கு

நகர்புற - முதலாந்தர - பாடசாலைகளை மேலும் மேலும் வளர்க்கும் நீங்கள் - பின்தங்கிய பிரதேச பாடசாலைகளுக்கு கருணைகாட்டக்கூடாதா? கோயில்களுக்கு வாரி வாரி வழங்கும் பாரி வள்ளல்களே! ஏழைச் சிறுவர்களுக்கு உதவ முன்வரவேண்டும். முன்பள்ளி செல்ல வசதியில்லாத சிறுவர்களுக்கு ஏன் வாய்ப்பும் வசதியும் செய்யக்கூடாது? மனமிருந்தால் இடமுண்டு. உரும்பிராய் செல்வபுரத்தில் முன்பள்ளிக்கு சகல உதவிகளும் செய்து வரும் வெளிநாட்டுத் தம்பதிகள் இதற்கு நல்ல உதாரணம். இலண்டன் வாழ் உரும்பிராய் வாசி இளைஞர் இலட்சக்கணக்கான ரூபாய்களை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலைக்கு கொடுத்து பாடசாலை விருத்திக்கு உதவியதை மறக்கமுடியுமா? இப்பாடசாலை கிராமப் பாடசாலை. ஆயினும் அதிபர் யோகராசாவின் அன்பு வேண்டுகோளை ஏற்று உதவிய இளைஞன் போற்றப்பட வேண்டியவரே! (4ஆம் பக்கம் பார்க்க)

## இறையருளாற் தடையின்றி என்றும் வாழி

நந்தமது சைவநெறி நாளு மோங்க
நற்பணிக ளாற்றிந்து சாத னமிங்
கெந்தமது மாணவர்கள் எழுச்சி யோடு
இகமதனின் வாழ்வினிலே ஏற்றங் கண்டே
சிந்தனையி லுயர்ந்தோங்கு செல்வ ராகிச்
சிறந்திடுநற் குடிகளெனச் செழிக்க ஊக்கும்
இந்தசைவ பரிபாலன சபையின் சேவை
இறையருளாற் தடையின்றி என்றும் வாழி

*– நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்*

## பாதமதிலே உறங்கும் வரந்தாராய்

சாலைவழி யேந டந்து போபவர்கள் நாளும் நின்றுன்
தாள்தொழுது போதல் கண்டும் – பணியாமல்
தாளிணைய தேம நந்து தாபமிக வாகி நொந்து
தாரணியி லேயு ழன்று – திரிவேனை
பாலனென வேபு கன்ற வேலனுனை யேபு கழ்ந்து
பாடவரு ளேசு ரந்து – அருள்வேலா
பாரதினி லேயு ழன்று பாழ்படவி டாம லென்றும்
பாதமதி லேயு றங்கு – வரந்தாராய்
கலைதனை யேயு வந்து காலிணைய தேயு கந்து
காதவழி யேயு ருண்டு – வருவோரும்
காலடிய தேய ழிந்து போகவுனை யேநி னைந்து
காதலுட னேந டந்து – தொழுவோரும்
காலபய மேது மின்றி ஞாலமதில் வாழ வுன்றன்
கோலமயி லேறி வந்து – அருள்கோனே
காணவரி தான நல்லை மாபதியி லேய மர்ந்து
கோதிலரு ளேவ ழங்கு – இறையோனே

*– நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்.*

## அளவையூர் தந்த அருட்கவிப்புலவர்



*சிந்தனைச் சிற்பியாய்ச் சிறந்து விளங்கி*
*அளப்பரிய சேவை ஆற்றிடும் அண்ணல்*
*வந்தனை செய்தே வாழ்ந்திடும் வள்ளல்*
*அளவையூர் தந்த அருட்கவிப்புலவர்*
*கந்தனை வணங்கியே கவிபாடி யேத்திடும்*
*காருண்ய சீலரே கண்ணனின் பக்தரே*
*உந்தனைப் பெற்றநாம் பாக்கிய வான்களே*
*வணங்கியே துதிப்போம் வாழ்த்துக்கள் கூறி!*

*எண்ணிய கருமங்கள் எளிதாய் நிறைவுற*
*வள்ளலை நாடியே வருவோர் மகிழ்வுற*
*புண்ணிய சீலராம் புலவர் விநாசித்தம்பி ஐயா*
*புகழுடன் விளங்கி நலமுடன் வாழ்ந்து*
*கண்ணிய வாழ்விலே கண்ணனைப் பரவிடும்*
*அண்ணலே அமுதமே அறிவுப் பெட்டகமே*
*மண்ணிலே மாந்தர்நாம் மாண்புடன் வாழ்ந்திட*
*வணங்கியே துதிப்போம் வாழ்த்துக்கள் கூறி!*

**கவிமணி இராசையா ஶ்ரீதரன்**
யாழ். நாச்சிமார் கோயிலடி.

## கோபுரங்கள் உயர்கின்றன!.............

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

*இப்படியான அன்புள்ளங்கள் ஒவ்வொரு கிராமத் திற்கும் உதவி செய்திருக்கலாம். அவற்றினை எமக்கு அறிவித்தால் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.*

**இனி ஒரு விதி செய்வோம்**

*புலால் உண்பது நியாயப்படுத்த முடியாதது. புலால் மறுத்தல் மகத்தானது. பசுவதை - பசுக்கொலை - தடுக்கப்படவேண்டும். 'கோமாதா' எமது வணக் கத்திற்குரிய பசு. சிவபெருமானின் வாகனம் இடபம். மாட்டிறைச்சியை உண்ணமாட்டோம். வாங்கமாட் டோம் என்று இந்துக்கள் இனி - இல்லை - உடனே முடிவு செய்ய வேண்டும். விலைக்கு இறைச்சி வாங் காமல் இருப்போமாயின் விற்பதற்காக மாட்டை ஏன் கொல்ல வேண்டும் என்ற நிலை தோன்றும்.*

*இதனைச் செய்ய -*

**அன்னையரே!**

*மாட்டிறைச்சி சமைக்க மாட்டோம் என்று திடமாக கிளர்ந்தெழுங்கள்!*

**இனிய இந்து இளைஞர்களே!**

*ஏன் தயக்கம்?.......................*

*நல்லமுடிவு - உங்கள் கையில்!*

**இந்த மாதம் இந்தத் தொண்டு**

*கொக்குவில் வளர்மதி நடாத்தும் "நிறைவாழ்வகம்" பாராட்டப்பட வேண்டிய பெரும் தொண்டாகும். இந்தத் தொண்டில் ஓராண்டு நிறைவேற்றிவிட்டது என்பது அவர்களின் சாதனை. இந்த மாதம் முதல் கொக்குவில் ஸ்தான சி.சி.பாடசாலை மாணவர் களுக்குத் நாளாந்தம் நிறையுணவு வழங்கத் தொடங்கி யுள்ளார்கள். இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் எல்லோரும் வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் பெற்றோர்களின் பிள்ளைகளே இதுவல்ல வோ சிவத்தொண்டு!*

☆

# சரியை மார்க்கம்

## (கேட்டல் நெறி)

நாம் இங்கே தேவாரத்தில் நாவுக்கரசநாயனாரால் அருளப்பட்ட சரியாமார்க்க நெறியைச் சாதனைக்கேற்ற முறையில் சைவசாத்திர முறைப்படி பயின்று தெளிந்து அனுட்டிக்க உள்ளோம். நாவுக்கரசர் தான் முதன்முதலாகச் சைவ உலகுக்குச் சரியாமார்க்கத்தை நன்கு அறிமுகப்படுத்தினார் என நாம் வாதாடவில்லை. "இப்போ புதிதோடீ எப்போ உள்ள தெடீ" என்பதற்கு இணங்க நாம் அறியாத சிவாகம காலத் தில் இருந்தே சரியாமார்க்கம் அனுட்டிக்கப்பட்டு வருகிறது.

அதைப்பற்றிய விளக்கத்தைத் திருமூலர் தாம் முதன்முதலாகத் தூயதமிழில் நமக்கு அளித்துள்ளார். அவர் ஒரு சித்தரும் சிவயோகியுமாகவே வாழ்ந்தார். திருக்கோயிலிலும் சரியை வழிபாட்டிலும் அவர் அதிக அக்கறை காட்டியுள்ளதாகப் புலப்படவில்லை. நாவுக்கரசரோ எனின் தமது வாழ்க்கையையே சரியாமார்க்கத்தில் சிவாலய வழிபாட்டிலும் சரியைப் பூசைகளிலும் பெரும்பாலும் செலவிட்டவர். சைவ சமய வழிபாட்டின் ஆரம்பநிலையில் உள்ள சாதகர்களுக்கு அவரைப்போல எடுத்துக்காட்டாக உள்ளவர் எவரும் இல்லை. உழவாரத்தொண்டே அவருடைய சரியைநெறியாகும்.

பிராமணர்களால் தாசர்கள் என அழைக்கப்படும் சூத்திரர்களுடைய குலத்திலே பிறந்தார். ஆயினும் அவர் பயிர் செய்யும் வேளாளர் பரம்பரையிலே பிறந்தபடியால் தாசர்களுக்குரிய தாசமார்க்கம் ஆகிய சரியைநெறியையே விசேடமாக அனுட்டிக்கநேர்ந்தது போலும். அவர் காட்டிய சரியைநெறியில் வேறுஎவரும் காட்டாத விசேடமான தனிச் சிறப்பு ஒன்றுண்டு. அச்சிறப்பு மறைபொருளாக உள்ளது. அதனால், அனேக சைவமக்கள் அதனைச் சரிவரஅறியாது உள்ளனர். வேளாளனாகப் பிறந்து வளர்ந்தபடியால் அவருக்குப் பயிர்ச்செய்கையில் நல்ல அனுபவம் இருந்தது. அந்த அனுபவம் அவருக்குப் பயிர் எவ்வாறு வளர்கிறது என்பதையும் அதுவளர்ந்து அரும்பு, மலர், காய், கனி ஆகியவற்றைக் கொடுக்கும் நிலை அடைந்து உலகுக்குப் பெரும் பலன் அளிக்கிறது என்பதையும் அவர் விழிப்புணர்வுடன் சிறுவயதில் அவதானித்துத் தெளிந்தார். தமது தூயதெளிவை தேவாரங்கள் மூலம் வெளிப்படுத்திப் பிராமண குருமார்களுடைய ஆதரவு இன்றியே உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் தாசர்கள் என அழைக்கப்படும் நாமும் நேரடியாக சிவனருள்பெற்று ஆன்மீகவிடுதலை அடையலாம் என்பதைக் காட்டியதே அவருடைய தனிச்சிறப்பாகும்.

அவர் வாழ்ந்த காலத்தில் சமணமதம் தமிழ்நாட்டில் பரவலாயிற்று. சமணர்களுடைய சீவகாருண்யக் கோட்பாட்டினாலும் சியாத்வாதத் திறமையினாலும் நாவுக்கரசர் வாலிப காலத்திலே கவரப்பெற்றுத் தமது சைவசமயத்தைவிட்டுச் சமணமதம் மாறினார். அவருடைய ஆற்றலை அறிந்த சமண குருபீடத்தினர் அவருக்குப் பயிற்சியளித்து ஒரு சமணகுருவாக நியமித்தனர். தருமசேனர் என்ற பெயருடன் அவர் இருபது வருடகாலம் சமணமத சேவையாற்றினார். அப்பொழுது அவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

சிறுவயதிலேயே தமது பெற்றோரை இழந்து அனாதையாகிய நாவுக்கரசரை அவருடைய ஒரே சகோதரியாகிய திலகவதியார் என்பார் கண்ணை இமைகாப்பதுபோல பராமரித்துவந்தார். வாழ்விழந்த அவர் மறுமணம் செய்யாது தம்பியாரைக் கவனித்துக்கொண்டு மிகுந்த பக்திசிரத்தையுடன் சிவவழிபாட்டில் காலத்தைச் செலவிட்டுவந்தார். வயதுவந்த பிற்பாடு தம்பியார் தன்னை விட்டுப் பிரிந்து சமணமதத்தைச் சேர்ந்தமை தீராத் துயரத்தைக் கொடுத்தது. தமது ஊரில் இருந்த வீரட்டானத்துறைச் சிவன்கோயிலை வழக்கமாக வழிபட்டுவந்தார். அபபொழுதெல்லாம் தம்பியாரை மீட்டருளும்படி மனம் உருகிச் சிவனை வேண்டிவந்தார். அவருடைய பிரார்த்தனை பலித்தது. சிவன் அருள்பாலித்தார்.

நல்லகுருநாதன் நம்மை வருத்துவது கொல்ல அல்ல. பொல்லாத தீவினையைப் போக்கவாகும் என்பதற்கிணங்கச் சிவபெருமான் நாவுக்கரசருக்குச் சூலை நோயை வருவித்தார். அதுவே அவருடைய சமண மத வழிபாட்டில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியது. சூலைநோயால் வருந்திய தருமசேனருக்குச் சமணகுருமார்கள் பலவிதமான சிகிச்சை அளித்தனர். அவருடைய மந்திரதந்திர மருந்துகள் எதுவும் பலிக்கவில்லை. துன்பத்தில் துடித்த தருமசேனரின் மெய் உணர்தற் கண் திறந்தது. சமணர்களால் தனது பொல்லாத நோயைக் குணப்படுத்த இயலாதென்பதைத் தெளிந்தார். தமது தமக்கையாரிடம் சென்றால்தான் நோய்மாறுவதற்கு வழி உண்டாகும் எனத்தெளிந்தார். திருவதிகைக் கிராமத்தில் இருந்த தமது தமக்கையிடம் சென்றார்.

தம்பியாரைக் கண்ட திலகவதியார் சிவன் அருளை நினைந்து பரவசப்பட்டு அவரைக் கட்டித்தழுவி வரவேற்றார். அவர் சூலைநோயால் வருந்தும் காரணத்தை உணர்ந்தார். வீரட்டானத்துறை வைத்தியநாதன் இடமே அந்த கொடிய நோய்க்கு உகந்த மருந்து உண்டு என நம்பினார். ஆகவே அல்லற்படும் அவரை வீரட்டானத்துறைச் சிவன்கோயிலுக்கு அழைத்துச் சென்று வழிபடும் படி விட்டார். மதமாற்றம் செய்த தனது தவறை உணர்ந்த நாவுக்கரசர் சிவனிடம் மன்னிப்புக் கோரிக் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கித் தன்னையே மறந்து வைத்தியநாதனின் தாள் தலைப்பட்டு அருளிய முதற்தேவாரம் இதோ:

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
    கொடுமை பலசெய் தனநான் அறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
    பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியேன்
    குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றேன் அடியேன், அதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம் மானே!

இத்தேவாரம் சரியைமார்க்கத்துக்கு ஒரு திறவுகோலாக அமைந்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாகத் தெள்ளு தமிழில் வள்ளுவன் கூறிய,

"சுடச்சுடரும் பொன்போல ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

எனும் குறட்பா உள்ளது. தேவார திருவாசகம் அருளிய நால்வருள் நாவுக்கரசரைப் போல அதிக துன்பம் அனுபவித்தவர் யாருமில்லை. அவர் துன்பத்தில் துவண்டபோதெல்லாம் தவநிலையில் இருந்து அருளிய தேவாரங்களுள் ஐந்து பொன்போல் ஒளிவிட்டுச் சைவமக்களுக்கு வழிகாட்டுகின்றன. சைவசமயத்தில் உள்ள நூற்றுக்கணக்கான கடினமான நூல்களை படித்து விளங்கி அனுசரிக்க முடியவில்லையே எனக் குறைகூறும் சைவமக்கள் அந்த ஐந்து தேவாரங்களை மட்டும் ஓதிஉணர்ந்து (6ஆம் பக்கம் பார்க்க)

**சரியை மார்க்கம்.....**

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட்டாற் போதும். அதனால் அவர்கள் சகல துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறுதல் நிச்சயம். இத்தேவாரத்தை அருளியபோது அவரை வருத்திய சூலைநோய் நீங்கியது. இதிலிருந்து நாம் பயி லும் பாடம் சுவரை வைத்துக் கொண்டுதான் சித்திரம் வரை தல் வேண்டும் என்பதாகும். உடல் நலமும் மனநலமும் பெற விரும்பும் அடியார்களுக்கு "கூற்றா" எனும் தேவாரம் சிறந்த வழிகாட்டியாக உள்ளது.

கூற்றாயினவாறு என்பது இயமனுடைய போக்கைக் குறிப்பதாகும். இங்கே உளவியற் காலம் தான் காலன் எனும் யமனாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. உளவியற் காலத் தின் போக்கு இருவினைக்கு வித்திடுதல் ஆகும். இருவினை வித்தை முளைத்திடாது தடுத்து உதவக்கூடியது சிவாக் கினி எனப்படும் திருவருளாகும். இருவினை வித்தை வறுத்து முளையாது செய்யவேண்டியது அடியார்களின் கடமை ஆகும். அதற்கு ஆதாரம் அளிப்பது சிவசக்தியாகும். அது வியாப கமாக நீக்கம் அற எங்கும் பிரகாசமாக உள்ளது. இரு வினை பஞ்சுபோல நம்மிடம் உள்ளது. நமது மனம் சூரியகாந் தக் கல்லுப் போல உள்ளது. பஞ்சும் காந்தக்கல்லும் இருந் தாலும் அது தீப்பற்றி எரிவதில்லை. காந்தக் கல்லுக்கு எரிக்கும் சக்தி இல்லை. சூரிய ஒளியில் அதைச் சரிவரப் பிடித்தால் பஞ்சு தீப்பற்றி எரிவதைக் காணலாம். கூற்றுவனு டைய இருவினைப் போக்கை இறைவன் மாற்றி விலக்கும் ஆற்றல் உடையவன் ஆயினும் அடியார்கள் தமது தவமுயற்சி இல்லாது அந்த ஆற்றலைப் பெறுதல் அரிதாகும்.

அந்த ஆற்றலைப் பெறுவதற்குச் சைவசித்தாந்தம் நான்கு சாதனை வழிமுறைகளைக் காட்டியுள்ளது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதைச் சிவனடியார்கள் ஓரளவு உணர்வர். அவை தோத்திரங்களில் கூறப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றின் சாதனை நுட்பங்களைத் தோத்திரங் கள் மூலம் நாம் சரிவர விளங்கி அநுட்டிக்கத் தெரியாதுள் ளோம். ஆகவே நாம் சைவசாத்திரங்களை நாடவேண்டி உள்ளது. சாத்திரங்களிற்றான் சாதனை நுட்பங்கள் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. சாத்திரமுறைப்படி நான்கு சாதனை களும் இரண்டாகத் தொகுக்கப்பட்டு உபாயமார்க்கம் என வும், உண்மை மார்க்கம் எனவும் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சரியையும் கிரியையும் உபாயமார்க்க மாகவும் யோகமும், ஞானமும் உண்மை மார்க்கமாகவும் கொள்ளப்படுகின்றன. திருநாவுக்கரசர் உபாயமார்க்கத்தை யும், உண்மை மார்க்கத்தையும் படிமுறைப்படி சரிவர அனுட் டித்தே வீடுபேறு அடைந்தாரென்பது அவருடைய தேவாரங் களில் இருந்து ஆய்ந்து தெளியக்கூடியதாக உள்ளது.

ஆரம்ப கட்டத்தில் அவர் ஏற்றாய்யடிக்கே ஆலயத்தில் அல்லும் பகலும் உழவாரத் தொண்டு புரிந்து இறைவனைப் போற்றிப்பாடி மகிழ்ந்து வந்தார். அவர் புரிந்து வந்த ஆரம் பச் சரியைத் தொண்டை விளக்கும் அவர் அருளிய அருட் தேவாரம் இதோ:-

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா!
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டு
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா! சயபோற்றி!! போற்றி!!! என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி! என்றும்
ஆரூரா! என்றென்றே அலறா நில்லே.

இத்தேவாரத்திற் குறிக்கப்பட்டுள்ள உபாயமார்க்கப்படி புறப்பூசைச் சாதனை செய்து வந்தார். அதனால் அவரிடம் திரோதான சக்தி பெருகிற்று. தன்னிடம் சுத்த சக்தி பெரு குதல் வேண்டும் என்பதை உணர்ந்தார். அதற்காக உண்மை மார்க்கத்தில் கூறப்பட்ட பிரகாரம் அகப்பூசை செய்ய விரும்பினார். புறப்பூசையில் இருந்து அகப்பூசை செய்யும் அற்புதமான ஒரு சாதனை முறையைக் கண்டுபிடித்தார். அதைச் சரியை நெறியில் நின்று வழிபடுவோருக்கும் யோக ஞான நெறியை அனுசரிப்பதற்கு வேண்டிய ஆரம்ப அனுட் டானத்தை இன்னதென விளக்கி அருளியுள்ளார்.

இதோ அந்தத் தேவாரம்:-

உயிரா வணமிருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியில் உரு எழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்த்தி
அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூர் ஆண்ட
ஆயிராவணமே!என் அம்மானே! நின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே!

இந்த அருமையான தேவாரம் யோக சாதனைக்கு ஓர் அற்புதமான திறவுகோலாக அமைந்து உள்ளது. எழுத்தாளருக்கு இது அறுபத்து நான்கு வருடங்களுக்கு முன்பே வழிகாட்டி நெறிப்படுத்தி உள்ளது. அதன்பேறா கவே "கலைமகள் விளக்கம்" என்னும் எழுத்தாளருடைய கன்னிநூல் வெளிவந்தது. சிவசக்தி செபதியானத்துக்கு இத்தேவாரம் போல வேறு எதுவும் உத்தம வழிகாட்டு வதாக இல்லை. அகப்பூசையானது புறப்பூசையிலும் பார்க்க ஆயிரம் பங்கு சக்திவாய்ந்தது. ஆகவே நாவுக்கரசர் காட்டிய சுலபமான நெறியை அனுசரித்து நமது அகப் பூசைக்கு ஆயத்தம் செய்வோம். அது எப்படி? அதன் நுட்பத்தை "உயிரா வணமிருந்து" எனும் தேவாரம் வழுவற விளங்குவதை நாம் ஆய்ந்து உணர்ந்து ஆயத்தம் ஆகலாம்.

அதற்கு முன்பு நாம் நமது நிலைமையில் ஸ்திரமாகும் பொருட்டு "நிலைபெறுமாறு எண்ணுதியேல்" எனும் தேவார வழிகாட்டலுக்கு அமையச் சரியை வழிபாடு செய்தல் அவசியமாகும். அதன் பிற்பாடு ஆலய மூலஸ்தானத்தில் ஒரு புறமாக உட்கார்ந்து அங்குள்ள விக்கிரகத்தை உற்றுநோக்குதல் வேண்டும். அவ்வாறு உற்றுநோக்கும் போது நமது மன இந்திரியங்கள் உயிர்ப்பு உறாது சிவமந்திரத்தை மௌனமாக ஓதுதல் வேண்டும். அதன் உதவியுடன் நமது உள்ளமாகிய திரைச் சேலையை (கிழியை) ப்புனிதமான வெள்ளை ஆக்கிக்கொள்ளலாம். அவ்வாறு ஆக்கப்பட்டுள்ள கிழியில் மூலஸ்தானத்தில் உள்ள எம்பெருமானுடைய விக்கிரக உருவத்தை எழுதிப் பதிவுசெய்து பழகுவோம். உள்ளப் பக்குவ நிலை பெறாத வர்களால் தமது உள்ளக்கிழியில் இறைவனுடைய ஆனந்த நடராஜ உருவத்தைப் பூரணமாகப் பதிவுசெய்து கொள்ளு தல் அரிதாகும்.

இவ்வாறு இறைவனுடைய திருவுருவத்தை உள்ளக் கிழியில் எழுதும் போது இன்னும் ஒரு முக்கியமான காரியத்தை நாம் நாவுக்கரசர் செய்தது போலச் செய்தல் வேண்டும். அதாவது நமது உயிரை ஓர் ஆவணம் செய்து உடன்படிக்கை மூலம் இறைனிடம் ஒப்படைத்துவிடல் வேண்டும். அவ்வாறு செய்த சுந்தரமூர்த்தி நாயனார் தடுத்து ஆட்கொள்ளப்பட்ட சரித்திரம் நாம் அறிந்ததாகும். ஆவணஞ் செய்து கொடுத்தலின் மறை பொருள் வைராக்கிய பக்தி சிரத்தையுடன் அவனுடைய திருவடிகளே சரணம் என நம்பி நமது உயிரை அவனிடம் ஒப்படைத்தலாகும். அதை நாம் ஒரு சிவபுண்ணியமாகச் (7ஆம் பக்கம் பார்க்க)

**சரியை மார்க்கம்.....**

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தல் வேண்டும். சிவ புண்ணியமாவது எவ்வித பலாபலனும் கருதாது அன்பின் பொருட்டு அன்பு செலுத்தி அவனிடம் சரணாகதி அடைத லாகும். அதை இன்னும் அழுத்தம் திருத்தமாக உரைப்ப தாயின் எவ்வித சுயநலமும் கருதாது உயிர்த்தியாகம் செய்தல் எனலாம்.

அதனைத் தொடர்ந்து நாம் அகப் பூசை செய்தல் வேண்டும். அது எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும்? என்பதை நாவுக்கரசரே பின்வருமாறு விளக்குகிறார்.

*"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக*
*நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர் அமைய வாட்டி"*

ஈசனார்க்கு அகப்பூசை செய்யும்படி உபதேசிக்கிறார். நமது காயம் எனப்படும் இந்த உடம்புக்கு உயிர்தான் முக்கியமானது. அதனுள்ளே உயிர் மறைந்து ஒன்றாக உள்ளது. அதுபோலவே உயிருக்குள்ளே மறைந்து அத்து விதமாக - இரண்டற இறைவன் உள்ளான். அவன் புறக் கோயிலிலேதான் உள்ளான் என நினைத்து புறப்பூசை செய்து வணங்குதல் அவசியம் இல்லை. அவன் நமது உயிருக்கு உயிராக காயமே கோயிலாகக் கொண்டுள்ளான். அவனுக்கு புறப்பூசை செய்வதற்கு வேண்டிய நெய்யும், பாலும் பூவும் தண்ணீரும் தேவையில்லை. பலன் கருதாத தூய அன்பு நேயம் ஒன்றே போதும் என்பதைத் தெளிந்து செயற்படுவோம்.

காயமே கோயிலாகக் கொண்டு சரியையில் யோக வழிபாடு செய்யும் சாதகர்கள், சாத்திர முறைப்படி புரிய வேண்டிய முதற் சாதனைகள் இரண்டாகும். அவையாவன இருவினை ஒப்பும் சிவோகம் பாவனையும் ஆகும். இருவினை ஒப்பு நிலையில் இருந்து செய்யப்படுவதே தூய சிவபுண்ணியமாகும். தீமைக்கு எதிரான நன்மை கருதிச் செய்யப்படும் புண்ணியம் யாவும் உலகியற் பேற்றுக்கும் சுவர்க்கம் அடைவதற்குமே உரியனவாகும். அவற்றால் ஆன்மவீடுபேறு கிடைக்கமாட்டாது. எனவே வீடுபேறு விரும் பும் சிவனடியார்கள் நன்மை தீமை - புண்ணிய பாபம் - அறிவு அறியாமை எனப்படும் மனவிருத்தியினால் ஆக்கப்படும் இருமை வகையை உணர்ந்து அவற்றைச் சமமாகக் கருதி அவற்றை விட்டு நீங்கிச் சிவோகம் பாவனை செய்தல் அவசியமாகும். இதனை வள்ளுவர் மன இந்திரியச் சார்பு நீக்குதல் என்கிறார்.

சிவோகம் பாவனையை மெய்கண்டார் "அவனே தானாகிய நெறி" எனக் கூறுகிறார். சிவோகம் பாவனைக்குரிய மந்திரம் "சோகம்" எனத் திருமூலர் உரைக்கிறார். இந்த மந்திரம் பகுபதமாக உள்ளது. அதாவது:- சோ+அகம் ஆகும். இதில் சோ என்பது பரம்பொருளாகிய அது எனும் சிவனையும் அகம் என்பது பசுவாகிய இது எனும் உயிரையும் குறிப்பனவாகும். இதைத் திருமூலர் "தத்துவம் அசி" என்னும் மகா வாக்கியத்துடன் தொடர்புபடுத்தி சித்தாந்த வேதாந்த சமரச சன்மார்க்க விளக்கம் அளிக்கிறார். "தத்துவமசி" எனும் தலைப்பில் ஒன்பது திருமந்திரப் பாடல்கள் அருளியுள்ளார். அதிலுள்ள முதலாவது செய்யுளை ஓர் எடுத்துக் காட்டாகக் கீழே தருகிறோம்.

*சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்*
*தாவு பாதுரி யத்தினில் தற்பதம்*
*மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பத*
*மோவி விடுந்தத் துவமசி உண்மையே!*

தத்துவம் அசி என்னும் மகா வாக்கியம் வடமொழியில் உள்ளது. அதன் தமிழாக்கம் "நீயே அது ஆகிறாய்" என்பதாகும். சிவசித்தாந்த அபிமானிகள் "தத்துவமசி" எனும் மகாவாக்கியம் வேதாந்தக் கொள்கையைக் குறிப்பிடுகிறது எனக் கூறி அதை நிராகரிக்கின்றனர். (13ஆம் பக்கம் பார்க்க)

இக்கட்டுரை

## "சாதனைக்குரிய சைவதோத்திரமும் சாத்திரமும்"

என்ற நூலில் உள்ளது.

கட்டுரை ஆசிரியர் : **சைவநன்மணி நா.செல்லப்பா**



கல்வியிற்பாடசாலைகள் : **யா/நாவலர் பாடசாலை, யாழ். இந்துக்கல்லூரி, விக்ரோறியாக்கல்லூரி, விக்கினேஸ்வராக்கல்லூரி.**

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களிடம் விக்ரோறியாக் கல்லூரியில் நான்குவருடங்கள் சைவசித்தாந்தம் முறைப்படி பயின்றார். திருவாவடுதுறை ஆதீன முன்னாள் மகாவித்துவான் வச்சிரவேலு முதலியாரிடமும் கற்றார். தமிழ்மொழியை பண்டிதமணியிடம் (சி. கணபதிப் பிள்ளை) பயின்றார்.

இவர் சைவபரிபாலனசபை நிர்வாக சபையில் இருந்தவர். நீராவியடி சனசமூகநிலையத்தின் ஸ்தாபக தலைவர் அரச இந்துகலாசாரத் திணைக்களம் "சைவநன்மணி" பட்டத்தை இவருக்கு வழங்கி கௌரவித்தது. இன்று இவர் கனடாவில் வாழ்ந்துவருகின்றார். சுமார் பதினைந்து நூல்களை வெளியிட்டுள்ளார். அவர் நலமுடன் வாழ எல்லாம் வல்ல ஆண்டவன் அருள்புரிவாராக.

பூஜையில் திருமுறைக்கு உரிய இடம் வழங்குக!

# சைவாலய பூஜையில் தமிழ் வேதம்

- இலக்கியகலாநிதி, பண்டிதமணி மு.கந்தையா B.A (Hons)

**சை**வாலய பூஜையின் பொது அம்சங்கள் அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், தௌர்யத்ரிகம் (நிருத்த கீத வாக்கியங்கள்) என்பன பூஜையின் முழுமையைப் பேணுவதில் இந்த ஏழு அம்சங்களுக்கும் ஒரேமாதிரியான முக்கியத்துவம் உண்டு. இவற்றில் தோத்திரம் என்ற அம்சத்தில் பதி வாக்கு என்ற மகிமைக்குரிய தோத்திரங்கள் யாவும் இடம்பெறவேண்டியவை. இவ்வகையில் வேதம், ஆகமம், சைவத்திருமுறைகள் என்ற மூன்றும் பிரதானமானவை. தன் சிவபாவனை அழுத்தத்தினாலே தான் சிவனாகவே நின்று கொண்டு சிவனருளை வேண்டிப் பூஜை அம்சங்கள் ஒவ்வொன்றையும் நிறைவேற்ற பூசகர், எவ்வாறு வேதம் அவதாரய என்று வேண்டிக்கொண்டு வேதத்தில் உள்ள துதியையும் ஆகமம் அவதாரய என்று வேண்டிக்கொண்டு ஆகமத்தில் உள்ள துதியையும், கூறக் கடமைப்பட்டுள்ளாரோ அவ்வாறே 'தேவாரம் அவதாரய' 'திருவாசகம் அவதாரய' என்று இவ்வகையில் வேண்டிக்கொண்டு திருமுறைகளையும் ஓதக்கடமைப்பட்டுள்ளார். அவரே சங்கறபித்துக் கொண்டு பூஜை செய்ய முன்னிற்கின்றமையால் அது அவரே செய்தற்குரியது. சில வேளை தமக்கு ஓதும் திறமை போதாதென்ற காரணத்தால் பூசகர் ஒருவர் அத்திறமையுள்ள மற்றொருவர் மூலம், அதைச் செய்விக்கவேண்டியிருப்பின் தன் தியான வன்மையால் அவரையும் சிவபாவனையில் நிற்பவராகப் பாவித்து அவருக்கு விபூதிவழங்குதல் மூலம் தமது செயலுரிமையை அவர்க்கேற்றி, அவர் அதை நிறைவேற்றும்வரை தாமும் அச் செயற்பாவனையில் வழுவாது தியானத்தில் ஒடுங்கி நின்று தாமே தம்கையால் இத்தோத்திர பூஜையைச் சுவாமிக்கு ஒப்புக் கொடுத்துத் தீபாராதனை செய்யவேண்டியவராகின்றார். இது பூசை இலட்சணத்திற்கு ஒத்த நியதியாகும்.

இந் நியதியானது இன்றைய நமது ஆலய பூஜை வைபவங்களிற் பெரிதும் பின்னமடைந்திருக்கின்றது. பதிவாக்காகிய தோத்திரம் என்ற வகையில் எழுதாமறையாகிய வேதத்திற்கும் எழுதுமறையாகிய திருமுறைக்குமிடையிலுள்ள அந்தரங்கத் தொடர்பு ஆசீர்வாதம் என்ற மற்றொன்றினால் போதிக்கப்பட்டுப் போய்விடுகிறது. பூஜா மந்திரமும், பூஜைத்துதியுமாய், தனித்தனி அமையவல்ல வேதத்திற்கும் திருமுறைக்குமிடையே இவ் விரண்டில் ஒன்றுமாகாத ஆசீர்வாதம் புது வரத்தாகப் புகுந்துகொண்ட புதுமைதான் என்னையோ! ஆசீர்வாதம் என்பது பூஜையில் நேர்ந்துள்ள குறைகள் நிறைவுறவும் குறித்த பூஜைப் பலனால் பொதுவாக உலகுயிர்களும், சிறப்பாகப் பூஜையில் சம்பந்தப்பட்ட எஜமான் முதலியோரும் இக பரப்பேறுகளைப் பெறவும் மஹான்கள் அனுக்கிரகிக்க வேண்டுமென்ற விருப்ப வெளியீடாகும். அது பூஜை அம்சங்கள் சகலமும் பூர்த்தியானபின் நிகழ்தற்குரியது. பூஜை முடிந்தபிறகு குறைநிறைகளுக்கு அமைதி கேட்பதுதானே பொருத்தம். குறையை வைத்துக் கொண்டு குறைநிறைகளுக்கு அமைதிகேட்பதுதானே பொருத்தம். குறையை வைத்துக்கொண்டு குறைநிறைகளுக்கு அமைதி கேட்பது எப்படி? அவ்வகையில் பார்த்தால் பூஜையொன்றில் ஆசீர்வாதம் செய்யப்பட்டுவிட்ட தெனில் பூஜை முடிந்தாய்விட்டதென்ற நிலையையே தெரிவிப்பதாகும். அதன்மேல் 'தேவாரம் அவதாரய' என்று திருமுறை ஓதுவிக்கப்பெறுமாகில் அப்பூஜையில் தோத்திர பூசையம்சம் சிறங்கணிக்கப்பட்டு அவ்வகையால் திருமுறை புறக்கணிக்கப்பட்ட தென்பதே அர்த்தமாகும். சிவபெருமானால் சிவமெஞ்ஞானிகளைக் கொண்டு முன்னின்று பாடுவிக்கப்பெற்ற திருமுறைகள், சிவன் வாக்கே தம் வாக்காக வருவதாக அவர்கள் கூறும் அத்தாட்சியோடு கூடிய திருமுறைகள், வேதப்பொருளையே கூறுவனவாக (9ஆம் பக்கம் பார்க்க)

## ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்



*ஆன்றவிந்த கொள்கையினால் விளங்குகின்ற தோற்றம்*
*அன்புடனே அறங்கலந்தே விளங்குகின்ற வாழ்க்கை*
*சான்றோரும் வியக்கின்ற பேர்அறிவு பெற்றும்*
*தமைவியவாப் பெரும்பண்பைத் தமதாகக் கொண்டார்.*

*இவரிடத்தே புகழ்தேடிச் சென்றதுவே அல்லால்*
*புகழ்இடத்தை இவர்தேடிச் சென்றதில்லை என்றும்*
*தவமுனிவர் கொண்டிருக்கும் அடக்கத்தைக் கொண்டார்.*
*தமிழினுடன் ஆங்கிலமும் ஆரியமும் தெளிந்தார்.*

*கற்பதையே தொழிலாக வாழ்வெல்லாம் கொண்டார்*
*கற்றபடி நின்றமையால் சான்றோரே ஆனார்*
*பற்றதனை எப்போதும் இறைபதத்தே வைத்தே*
*பாரினிலே வாழ்ந்திட்டார் சமயநெறி நின்றார்.*

*நாவலரின் பெருமையினை அறிந்தோர்கள் சிலருள்*
*நம்அறிஞர் ஒருவரென யாவருமே அறிவார்*
*பாமலரால் நாவலர்க்கு வழிபாடு செய்தார்*
*பார்அறிய அவர் பெருமை தனைவிளக்கி வைத்தார்.*

*உலகுதொழும் வள்ளுவரின் உயர்ந்தகுறள் அதற்கே*
*பொருந்துபரி மேலழகர் உரைத்த உரைதன்னை*
*இலகுபட விளங்குவகை விளக்கங்கள் தந்தார்*
*இப்பெரிய பணியதனைச் சிறப்பாகச் செய்தார்.*

*சித்தாந்த செழும்புதையல் என்னும்உயர் நூலும்*
*சித்தாந்த விளக்கிற்சைவக் கிரியையாம் நூலாம்*
*மெத்தவே சிறப்பாக உரைநடையில் தந்தார்.*
*மேவுபல நூல்களினைத் தமிழ்சைவத் தொண்டின்*

*பயனாக இலங்கிடவே இங்குவைத்துச் சென்றார்*
*பண்பாளர் கல்விமான் ஒழுக்கத்தில் நின்றார்*
*நயனாய நெஞ்சத்தார் என்றுஉலகு போற்ற*
*நமைப்பிரிந்தார் புகழையிந்த உலகினிலே விட்டே.*

- புலவர் ம.பார்வதிநாதசிவம்

### சைவாலய பூஜையில்.....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆன்றோரால் அறுதி யிட்டு வைக்கப்பெற்ற திருமுறைகள், தமிழ் நாட்டிலே தனித்துவக்கலையையும் ததும்பவைத்த திருமுறைகள், பல்வேறு தெய்வாதிசயங்களை நிகழ்வித்த திருமுறைகள், மந்திர மகாராசனாகிய பஞ்சஷரமே ஞானமும் மெய்ந்நெறியும் என்ற மகிமையைப் பாருலகறியப் பரப்பி வைத்த திருமுறைகள், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லு தற்கான எளிமையும் இனிமையும் படைத்த திருமுறைகள் சிவாலய பூஜையில் அங்ஙனம் புறக்கணிக் கப்படுதல் சைவத்துக்கு அழகே அல்ல. இதனால் சைவம் ஒரு புறம் அவமதிக் கப்படுகிறதெனில் தவறே அல்ல.

இனி, ஆசீர்வாதத்திற்குப் பின் திருமுறைகள் ஓதவிட்டு, அவ்வேளையில் பூசகர் வேறு பராக்காயிருக்கக் காணும் உபத்திரவம் வேறு. அந்நிலைமையே திருமுறை பூஜையிற் சேர்க்கை பெறாது புறம்போக்காய் விடப்பட்டமையைத் துலாம்பரமாகக் காட்டுவதாகும். திருமுறை பாடப்படும்போது பூஜகர் அர்ச்சனைக் குறை நிறைவேற்றுதல், வேறுவகை யில் ஆசுவாசம் பண்ணிக்கொள்ளுதல் கூடப் பெரும்பான்மை. திருமுறைமந்திர ஒலிக்கு எதிரிடையாக அர்ச்சனை மந்திர ஒலியைக் கிளப்புதல், அவர் ஏதோ சொல்கிறார், அதை விட்டு இதைக் கேளும், என்று சுவாமியின் கவனத்தை திசைதிருப்பும் தந்திரமோ என்றும் ஐயுறுதற்கு இடமாகிறது. அன்றியும், பூஜை அரங்கில் திருமுறைக்குத் தனித்துவமான இடமில்லை என்பதாக வழிபடுவோரிடத்தில் தவறான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் வல்லதாகின்றது. இந் நிலையில் நீடிக்கவிடப்படுதல் தகுமோ? சிந்திமின்!

ஆகம அனுசரணையிலுள்ள தமிழ் நாட்டுக் கோயில் களில் தோத்திர பூஜையில் வேதமும் திருமுறையும் இடை யீடின்றி இடம்பெறுகின்றன. வேலணைக்கு அப்பாலுள்ள வட இலங்கைக் கோயில்களிலும் அங்ஙனமே. திருக் கேதீசுவரம், சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில், ஐயனார் கோயில்களிலும் அங்ஙனமே. இருந்தும் குடா நாட்டிலும் இலங்கையில் மறுபகுதிகளிலும் பரவலாக இதற்குப் புறக்கணிப்பு நிகழ்கின்றது. சொல்லியும் கேட் காமல் தவறாகப் பண்ணும் புறக்கணிப்பு நிலை காழ்ப்புற் றிருத்தலும் கண்கூடு.

இந்நிலையில் திருத்தம் நேரும் வாய்ப்பு இரு விதங் களில் கைகூடுதல் கூடும். ஆலய நிர்வாகமும் பூஜை உபயகாரரும் பூசகரிடம் உண்மையை விளக்கிச் சரியான நிலை நடைமுறைக்கு வரச்செய்தல் ஒரு விதம். இது சுமூக வழியான நடவடிக்கையாகும். மற்றையது ஆசீர்வா தத்திற்குப் பின் திருமுறை ஓதவிடப்படுமிடத்து ஒருவரும் திருமுறை ஓத முன் வராதிருத்தல், இது எதிர்நடவடிக் கையாயினும் ஒருசில நாட்களில் சரியான நிலையை வருவிக்கக்கூடியது. அன்றியும் திருமுறையின் உயர் மகி மையை ஆலய வளாகத்தில் ஸ்தாபிக்கக்கூடியதுமாம்.

எந்த வகையாலேயோ சிவநெறி ஆலய நெறிகளைப் போல பூஜை நெறியையும் சரி நிலையில் ஆக்கி வைப்பது சிவ புண்ணியம். பிழையானது நடக்கப் பார்த்திருப்பதே சிவ அபராதம். சிவ அபராத வளர்ச்சிக்கல்ல, சிவபுண்ணிய விருத்திக்கு உரியது கோயில். இது நாவலர் வழி வழி உணர்வில் சைவ மக்கள் அவசியம் கடைப்பிடிக்க வேண் டிய ஒன்றாகும். ✹

---



## செஞ்சொற் செல்வர் ........

## சிவநெறித் தவமகன்

# ஆறு.திருமுருகன்

### எழுத்தறிவிக்கும் ஆசிரியப்பணி.

அதுமட்டுமா?

☆ *சிவத்தொண்டு ................*

☆ *இந்துசமயச் சொற்பொழிவுகள் – (ஊரிலும் – உலகமெங்கனும்)*

☆ *சைவச்சிறுவர் இல்லங்களுக்கு நிதியுதவிகள்*

☆ *யாழ். போதனா வைத்தியசாலைக்கு பல்வேறு உதவிகள்*

- விலைமதிப்பற்ற நூல்கள் வழங்கியமை
- நவீன கண்சிகிச்சை நிலையம்

☆ *கண்பார்வையற்ற வறிய சிறுவர்களுக்கு சுன்னாகத்தில் வாழ்வகம் அமைத்துக் கொடுத்தது.*

☆ *சிவயோகம் அன்னையர் குடியிருப்பு*
(இளம் விதவைகளுக்கு புதியவீடுகள்)

☆ *புற்றுநோயாளர் நலனுக்காக பெரும் நன்கொடை*

☆ *இந்துக்கள் கன்தானசபை உருவாக்கிய உத்தமர்.*

*இவரது பாதையில் இளைஞர்கள் அணிதிரள்க!*

# தடுமாறித்தவித்து –
# திசையறியாது திக்கற்று நின்றவேளையில் ......

## தாயகம் - சிறிதரன்

தாயகமண்ணிலே ........................... போர்! போரினால் பெரும் அழிவுகள். மக்கள் இயல்பு வாழ்க்கை சிதறிச் சின்னாபின்னமாகியது. வாழ்ந்த வீட்டினை விட்டோடினர். ஊரைத்துறந்து திக்கெல்லாம் திசையறியாத பேயோட்டம். இதனால் வாழ்வு முறை மாற்றமடைந்தது. ஏழை மக்கள் எல்லாவிதத்திலும் நசுக்கிப் பிழியப்பட்டனர். நாட் கூலி-...... என்ன செய்ய முடியும்? இரத்தத்தைச் சிந்தி உழைத்தவளை உறிஞ்சியது குடி.



குடியின் கோரப்பிடியினால் குடும்பமே குலைந்தது. பாடசாலைக்குச் செல்லவேண்டிய வயதிலே வயிற்றுக் கில்லாத கொடுமையினால் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் வீதியோரங்களில் வீணே சுற்றித்திரிந்தனர். வசதிகளே இல்லாத வறிய சிறுவர்கள் சிறுமிகளை எம்மால் அரவணைக்க முடிந்ததா? அறிவைப்பெறவேண்டிய வேளையிலே பிச்சையை இச்சையாகக் கொண்டனர். இல்லாத இம்சை இனிய இளம் வாழ்வை இருளாக்கியது. உதயசூரியன் - இல்லை - விடிவெள்ளி தெரிந்ததா?

-----------------------------------------------

சிந்தையிலே தெளிவு, தெளிவானதும் இலட்சியம். 'இதுதான் என்வழி' என்ற அசையாத முடிவு. சிறிதரன் - செயல்படத் தொடங்கினார். தனக்குத் தெரிந்த - தெரியாதவர்களிடம் கலந்தாலோசித்தார். முடிவுஎன்ன?

வாழத்துடிக்கும் - வாழவகையற்ற - வறிய பிள்ளைகளுக்கு விடி வெள்ளி! "தாயகம்" அவரது இலட்சியதாகமானது. தணியாத தவத்தாகம்.

கொக்குவில் பொற்பதி வீதியில் இலட்சக்கணக்கான முதலீட்டில் 'தாயகம்' உருவாக்கப்பட்டது. அழகான இயற்கைச்சூழல் தோற்றுவிக்கப்பட்டது.

சரியான "திட்டமிடல்" - "செயற்றிட்டம்" என்பன மேற்கொள்ளப்பட்டது. சுமார் எண்பதுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமிகள் சேர்க்கப்பட்டனர்.

☆ சுத்தமான சைவஉணவு.

இந்த உணவு நிறையுணவாக அமைக்கப்பட்டது.

☆ போதுமான உடைகள்
☆ வசதியான படுக்கைகள்
☆ சுத்தமான சமையலறை
☆ சுத்தமான குளியல் அறைகள்
☆ சுகாதாரமான கழிப்பறைகள்

இதுமட்டுமா?

☆ ஒவ்வொரு **10** பிள்ளைகளுக்கும் கல்வியூட்ட ஆசிரியை
☆ சிறுபிள்ளைகளுக்கு துணி தோய்த்துக் கொடுக்க உதவியாளர்
☆ ஒழுக்கமேற்பார்வையாளர்
☆ தேகநலன் தொடர்பாக உதவ வைத்திய கலாநிதி.
☆ காலை, மாலை பிரார்த்தனை.
☆ பொழுதுபோக்கு வசதிகள்
☆ விளையாட்டு வசதிகள்

மாணவர்கள் கற்கும் பாடசாலைகள்

1. யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
2. யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
3. கோண்டாவில் இந்துக் கல்லூரி

பாடசாலை சென்றுவர, சுற்றுலா செல்ல தனியான மினிபஸ்.

**சிறிதரன் பற்றி ........**

தினந்தோறும் காலைமுதல் பலதடவைகள் தானே நேரில் சென்று பொறுப்போடு

பணிசெய்யும் - சிறிதரன் -

இவர் கொனிக்கா - சிறி கலர்லாப் உரிமையாளர். சிறி அமலா நகைமாளிகை உரிமையாளர்.

ஆயினும் சிறுவர் நலவாழ்வில் நாட்டங்கொண்ட நல்ல மனிதன். அவரது கனவிலே தோன்றிய திட்டம்தான் தாயகம். இன்று இராசவீதியில் சுமார் ஐம்பது பரப்புக் காணியில் 'தாயகம்' புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இவரது பணிகளில் ஆலயத்திருப்பணிகளும் குறிப்பிடத்தக்கவை. வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில், அனுமார் கோயில், அன்னசத்திர ஆலயத்திருப்பணிகள் குறிப்பிடத்தக்கவை.

வாழவகையற்ற சின்னஞ்சிறுசுகளை வழிநடத்தி அரவணைத்து அறிவூட்டி வளர்ப்பது சிவப்பணியே!




அனைவரும் நினைவில் இருத்த வேண்டிய ஆறு முக்கிய வார்த்தைகள்:

☆ தொண்டு
☆ அன்பு
☆ சேவை
☆ தூய்மை
☆ தியானம்
☆ அனுபூதி.

- சுவாமிசிவானந்தர்

# நல்ல சேகரம் ஆனார் ஞானசேகரம்

## சிவயோக சுவாமிகளின் பட்டமளிப்பு

கொழும்புத்துறையில் வாழ்ந்த திரிகாலமும் உணர்ந்த ஞானி சிவயோக சுவாமிகள் அவரது குரு செல்லப்பர். செல்லப்பரின் குரு கடையிற்சுவாமிகள் இவ்வாறு மூன்று தலைமுறைகளுக்கு முன் தென்னிந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தவர் கடையிற்சுவாமிகள். நீதிவானாக இருந்த சுவாமிகள், ஒருவருக்கு தூக்குத் தண்டனையை தீர்ப்பாக வழங்க வேண்டிய நிலை வந்தது. அப்போ "இவனார்?" "நானார்?" "இவனுக்குத் தூக்குத்தண்டனை வழங்க நானார்?" எனச் சிந்தித்தார். எல்லாவற்றையும் துறந்து புறப்பட்டார். கடையிற்சுவாமிகள் இந்தியாவில் இருந்த ஒரு குரு பரம்பரையில் இருந்து வந்தவரே. இலங்கையில் மண்டைதீவில் தங்கிப் பின்னர் வண்ணார்பண்ணையில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

கடையிற்சுவாமியின் காலத்தில் வாழ்வதற்குப் பெரும்பேறு பெற்றவர்களுள் திருவாளர் ஞானசேகரத்தின் தாய், தந்தையரும் அடங்குவர். திருமணமாகி குழந்தைப்பேறு இல்லாத நிலையில் இருந்தபோது கடையிற்சுவாமியார் M.S. துரை எனப்படும் திருவாளர் ஞானசேகரத்தின் தந்தையாரிடம் சென்றார். கடையிற்சுவாமி எம்.எஸ்.துரையை அழைத்து இறைச்சித் துண்டொன்றைக் கடித்துக் கொடுத்து அதை உண்ணும்படி பணித்தார். அவ்வரிய அமிர்தத்தை உண்ட அத்தம்பதியர்களுக்கு மூத்த புத்திரனாக வந்துதித்தவரே திருவாளர் ஞானசேகரம்.

சிவயோக சுவாமிகள் காலாற நடந்து செல்வதுண்டு. அவ்வேளை குறிப்பிட்ட வீடுகளுக்கு அவர் செல்வார். சுவாமிகளின் காலடிபட்ட அவ்வீட்டு அன்பர்கள் எவ்வளவு பாக்கியவான்களாவர்! அவ்வாறு இப்பிறவியின் பயனை அடைந்தவர்களுள் திருமதி இராஜலசஷ்மியும் ஒருவர்.

இராஜலசஷ்மி சிறுவயதினராக இருக்கும்போது யோகசுவாமிகள் அவர்களின் வீட்டிற்கு அடிக்கடி செல்வார். இராஜலசஷ்மியின் தந்தை செல்லத்துரை தன் இறுதிமூச்சுள்ளவரை சுவாமியிடம் போய் வருவார். ஒருமுறை திருவாளர் செல்லத்துரை காய்ச்சலால் அல்லலுற்றிருந்தார். பல நாட்களாகக் காய்ச்சல் தொடர்ந்து இருந்தது. அவ்வேளை சுவாமி திருவாளர் செல்லத்துரையின் வீட்டிற்குச் சென்றார். திருவாளர் செல்லத்துரையிடம் "சோடா வாங்கிக் கொண்டா" என்று கேட்டார். கொண்டு வந்த சோடாவை முழுமையாக அருந்தினார். அத்துடன் திருவாளர் செல்லத் துரையின் காய்ச்சலும் மாறிவிட்டது. சுவாமிகள் ஒருமுறை இவர்களின் வீட்டிற்கு வந்தபோது இராஜலசஷ்மிக்கு வயது பதினொன்று



இருக்கும். இன்ன இன்ன திருக்குறளைப் பாடமாக்கு என அச்சிறுமிக்கு சுவாமி அன்புக் கட்டளையிட்டார். இவ்வாறு சுவாமியைத் தரிசிக்கவும், அவருடன் பேசவும் அவரை உபசரிக்கவும் அவருக்கு அன்புப் பணி செய்யவும் இராஜலசஷ்மிக்கு பெரும் பாக்கியம் கிடைத்தது. சிவயோகசுவாமிகள் முக்காலமும் உணர்ந்த மாமுனிவர். சிவயோகசுவாமிகளை அறியாதவர் ஒருவரும் இல்லை.

சிவயோகசுவாமிகளை எவரும் அணுகமுடியாது. உடல் சுத்தமாக இருந்தாலும், உள்ளம் பரிசுத்தமாக இல்லாவிடின் கடுமையான வார்த்தைகளால், வந்தவரைப் பேசிக்கலைத்துவிடுவார்.

"இவனை ஏன் உள்ள விட்டனீ
..............................இங்க
என்னநடக்குதென்று
விடுப்புப் பார்க்கவாறான்"

என்று சுவாமிகள் உரத்துக் கூறுவர். படலைக்கு வெளியே வருபவரையே தடுத்துநிறுத்திவிடுவார். சுவாமியின் வீட்டுக் கதவருகே வந்த பிரமுகர்களை பேசிக்கலைப்பார். யாராவது வரமுன்னரே இன்னார் வரப்போகிறார் பார்! என்பார். படித்தவர், பாமரர், செல்வந்தர், வறியவர், சிறுவர் பெரியோர் எல்லோருமே சுவாமிக்கு ஒரே மாதிரியாகத்தான் தெரியும். பலரை உக்கார வைத்து சிவபுராணம் பாடவைப்பார். பாடி முடித்ததும் அர்த்தம்கேட்பார். சிலருடன் சேர்ந்து உணவுண்பார். அவர்களது உணவுப் பழக்கத்தைப் பார்த்து "எழும்படா இவனுக்கு சாப்பிடத் தெரியாது" என்று கலைப்பார். பலர்பிரசா தங்கள் கொண்டு வருவார்கள். சுவாமி ஏற்கமறுப்பார். வேறு சிலரது பிரசாதங்கள் ஏற்கப்பட்டு எல்லோருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும்.

யோகர்சுவாமிகளை நாள்தோறும், எவ்வேளைகளிலும் தரிசிக்க விரும்பினர் ஞானகேசரம் குடும்பத்தினர். யோகர் சுவாமிகள் பாடும் குரலை, பேசும் எழிலை, ஈசன்போல் ஆடும் அழகை அனுபவிக்கவே அயலில் குடியமர்ந்தார். யோகர்சுவாமிகள் சிலவேளைகளில் முற்றத்தைக் கூட்டி அழகுபடுத்துவார். அப்போதெல்லாம் தில்லைக் கூத்தனோ என எண்ணும்படி கூத்தாடுவார். திருவாளார் ஞானசேகரம் தனது மனைவி சமைக்கும் அறுசுவை உண்டியை தன் மனைவி எடுத்துக்கொடுக்க அதை அன்புப் பிரசாதமாக சுவாமி யாரிடம் கொடுப்பார்.

சுவாமி பலருக்கும் பல்வேறு விதமாக நடந்து கொள்வார். சிலரை வரவேற்பார். பலரை பேசி அனுப்புவார். வந்தவர்கள் சென்ற பின் ஏதாவது கூறுவார். இவைகள் எல்லாம் வீண் வார்த்தைகள் அல்ல! அங்கு வந்தவர்களுக்கும் அதைக் கேட்பவர்களுக்கும் சுவாமிகளின் வார்த்தைகளில் பொதிந்துள்ள சிலேடை அர்த்தங்கள் விளங்க பல வருட காலங்கள் எடுக்கும். மனிதரை மனித மேம்பாடுடன் வாழ வைக்க யோகர்சுவாமிகள் கையாண்டயுக்திகள் அவை. வாழ்க்கையில் என்றும் சத்தியமாக, நித்தியமாக, நிலையாக அவ் வார்த்தைகள் இன்றும் ஒலிக்கின்றன.

ஒருமுறை சுவாமியிடம் திருவாளர் நல்லநாதன் திருமதி ரட்ணா நவரட்ணம் வேறும் பலர் வந்திருந்தனர்.

(13ஆம் பக்கம் பார்க்க)

### தலைவரின் வாழ்வகம் பற்றிய அறிமுகம்

# வாழ்வகமும் அதன் வளம் மிக்க பணிகளும்

கல்வி என்பது ஒவ்வொரு மனிதனின் பிறப்புரிமை. “ஒரு குழந்தைக்கு சுவாசம் எவ்வளவு இன்றியமையாததோ அந்த அளவுக்குக் கல்வியும் இன்றியமையாததாகின்றது” என்பது ஐ.நா. சபையின் முடிந்த முடிவான தீர்மானமாகும் அந்த வகையில் பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகளும் கல்விகற்பதற்குப் பூரண உரிமையுடையவர்களே. நல்ல கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கும் அதன் பயனை நுகர்ந்து கௌரவமான பிரசைகளாக வாழ்வதற்கும் அவர்களுக்குப் பூரண உரிமையுண்டு.

பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகள் அவர்களது உடற்குறைபாடு காரணமாக விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டியவர்களாகவும் பராமரிக்கப்பட வேண்டியவர்களாகவும் உள்ளனர். இவ்விதம் அவர்கள் கவனிக்கப்படுகின்றபோது அவர்களது வளர்ச்சி திடமானதாகவும் அபரிமிதமானதாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை. இவ்விதமாக நல்லமுறையில் கல்வியூட்டப்பட்டு, தகுந்தமுறையில் பராமரிக்கப்படுகின்ற ஒரு பிள்ளை உலக சமுதாயத்தோடு இணைந்துகொள்வதில் எவ்வித இடர்ப்பாடும் இருக்காது. சமுதாயத்தின் பயன்மிக்க பிரசைகளாக வாழ்வதிலும் எந்தத் தடையுமிருக்காது. பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகளுக்குச் சாதாரண பிள்ளைகளுடன் கல்வியை வழங்குவதன் மூலம் இயல்பாகவே அவர்கள் சமுதாய நீரோட்டத்துடன் இணைந்துகொள்கிறார்கள்.

### கல்வி

இந்த உலகில் ஒரு மனிதன் மாண்புடன் வாழ்வதற்குக் கல்வி மிகவும் இன்றியமையாதது. பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகளைப் பொறுத்தமட்டில்



அவர்களது வளமான வாழ்விற்குக் கல்வி மிக மிக இன்றியமையாதது என்று கூறின் அதில் மிகையேதுமில்லை. எமது வாழ்வகமானது பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகளுக்குக் கல்வி ஊட்டுகின்ற தனது ஒப்பற்ற பணியிலே முழுமூச்சுடன் ஈடுபட்டுவருகின்றது. எமது நாடுபோன்ற வளர்முக நாட்டிலே இவ்விதமான ஒரு கல்விப் பணியை மேற்கொள்வது அத்துணை இலகுவானதொரு செயலன்று. வாழ்வகம் பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும் விடா முயற்சியுடனும் இப் பெரும்பணியை முன்னெடுத்து வருகின்றது. வாழ்வகத்திற்கு வருகின்ற பிள்ளைகள் பல்வேறு தரங்களை உடையவர்களாக, பல்வேறு அறிவு மட்டங்களை உடையவர்களாக உள்ளனர். இவர்களை சாதாரண பாடசாலைகளில் சாதாரண பிள்ளைகளுடன் இணைந்து கல்விகற்பதற்கான வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. இப்பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் இப்பிள்ளைகளை அன்போடு அரவணைத்து இவர்களுக்குத் தேவையான விசேட உதவிகளை வழங்குகின்றனர். அத்துடன் வாழ்வகத்தால் பயிற்றப்பட்ட விசேட ஆசிரியர்களும் இப்பாடசாலைக்குச் சென்று இப்பிள்ளைகளுக்குக் கல்வி தொடர்பான விசேட உதவிகளை வழங்குகின்றனர். இதற்கு அப்பால் மேலதிகமாகத் தேவைப்படுகின்ற விசேட உதவிகள் பயிற்சிவகுப்புக்கள் என்பன வாழ்வகத்தில் வைத்தே இவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. இவற்றின் பயனாக பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகள் சாதாரண பிள்ளைகளுடன் இணைந்து அவர்களுக்குச் சமமான, அவர்களுடன் போட்டிபோட்டுக் கற்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

வாழ்வகத்தின் பணிகள், இடப்பெயர்வுகள் அனைத்திற்கும் மத்தியிலும் இன்று பதினைந்து ஆண்டுகளையும் தாண்டித் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. பல பிள்ளைகள் இங்கிருந்து கற்று வெளியேறியுள்ளனர். சிலர் பட்டதாரிகளாகி நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் தமது பல்கலைக்கழகக் கல்வியை மேற்கொண்டுள்ளனர். தற்போது முப்பத்திரண்டு பிள்ளைகள் வாழ்வகத்தில் வசிக்கின்றனர். நாட்டின் போர்ச்சூழலால் ஏற்பட்ட பாதிப்புக்களினால் இன்னும் ஏராளமான பிள்ளைகள் வாழ்வகத்தின் உதவியை நாடி நிற்கின்றனர். இவை எல்லாவற்றையும் ஏற்று இவர்களது வாழ்விலும் ஒளியூட்டவேண்டிய பாரிய பொறுப்பும் கடப்பாடும் வாழ்வகத்தின் முன்னால் விரிந்து கிடக்கின்றது. பெருமளவு நிதியுதவியும் பொது மக்களின் ஏகோபித்த ஆதரவும் இருந்தால் மட்டுமே நாம் இப்பணிகள் அனைத்தையும் முழுமையாக முன்னெடுக்கமுடியும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

**வாழ்வின்ஒளி ...............**

**கண்ணின் விழி**

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஒளியிழந்த சிறுவர்களை அரவணைத்து அறிவூட்டி வாழ்வளித்து வருபவர் செல்வி சு.சின்னத்தம்பி. 15ஆவது ஆண்டிலே ‘வாழ்வகம்’ வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கின்றது.

*சிறுதுளி .................... பெருவெள்ளம்!*

*உதவிசெய்திட முடியுமா?*

**வாழ்வகம்**

**விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்,**

**சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.**

# யார்க்கெடுத்துரைப்போம்...?

*நல்லூர்த்திருவிழாவில் –*

☆ தேர்த்திருவிழாவன்று 40 பவுண் பெறுமதியான நகைகள் திருட்டு

☆ தீர்த்தோற்சவத்தில் 54 பவுண் நகை திருட்டு

☆ தீர்த்தோற்சவத்தில் தீர்த்தக்கேணியில் கலாட்டா - அட்டகாசம்!

முருகன் தீர்த்தமாடிய நீரை தீர்த்தக் கேணியில் தெளிக்கமுடியவில்லை.

☆ பெண் திருடி பிடித்த தொண்டரின் கையைக் கடித்துவிட்டு தப்பியோட்டம்.

☆ பக்தர்கள் பார்த்து பார்த்து ஓட வீதியில் மோட்டார் சைக்கிள்கள் பறந்தோடின.....

☆ வீதித்தடையை உடைத்துத்தள்ளி பவனி வந்த காவலர்கள்.

☆ வீதியில் இளைஞர் கொண்டாடட்டம், திண்டாட்டம்பக்தர்களுக்கு!

☆ தட்டிக்கேட்டு குட்டிவிட்ட நல்லசேதி!

*முருகா! முடியாமுதலே! கந்தா! காப்பாற்று...!*

**நல்லசேதி...**

தியாகி திலீபன் நினைவுத்தூபி நல்லூரில்! நன்றியுடன் நாள்தோறும் நினைவு கூரமுடியுமல்லவா?

***சைவகலாசார சிற்பங்கள் – சிலைகள்***

1. உரும்பிராய் முருகன் கோவில் சித்திரத்தேரின் சிற்பங்கள் களவு.
2. உரும்பிராய் மேற்கு கருணாகரப்பிள்ளையார் கோயில் சித்திரத்தேரின் 12 யாழிகள் திருட்டு. இத்தேர் நூறாண்டு புதுமைவாய்ந்தது.
3. இளவாலை - ஆனைவிழுந்தான் ஆலயத்தில் விநாயகர் சிலை திருட்டு.

எடுப்பவர் யார்?

எங்கே - எப்படிப் போகின்றது?

எவர் வாங்குகின்றார்?..................

முருகா! இப்படியும் சோதனைமேல் சோதனையா?

***ஈழத்தமிழ் அறிஞர்களுக்கு நல்ல செய்தி***

திருவாவடுதுறை ஆதீனம் - சிவப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள் - ஈழத்தமிழ் அறிஞர்கட்கு பட்டம் வழங்கி கௌரவிக்கும் திட்டத்தினை தமது யாழ்ப்பாண விஜயத்தில் அறிவித்துள்ளார்.

---

## சரியை மார்க்கம்.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருமூலர் அதை ஆதரித்துச் சமரசம் கூறுவதைத் திருமந்திரம் 2571ஆம் செய்யுள் இறுதி இரண்டு அடிகளில் உரைப்பதைப் படித்துணருங்கள்.

*தவமுறு தத்துவம் அசிவே தாந்த*
*சிவமாம் அதுஞ்சித் தாந்தவே தாந்தமே!*

மகா வாக்கியமாக உள்ள தத்துவமசிக்கு உரிய சாத னையாகத் திகழ்வது சோகம் எனப்படும் மந்திர செப தியானமாகும். இந்தச் சிவோகம் பாவனையின் தத்துவ விளக்கம் பின்வருமாறுள்ளது. தீவிர பக்திசிரத்தையுடன் எவன் ஒருவன் அல்லும் பகலும் அனவரதமும் ஒரு பொரு ளையே குறிக்கோளாகக் கொண்டு மன ஒருமைப்பாட்டுடன் சிந்திக்கிறானோ அவன் அதுவே ஆகிறான். அழுக்கைக் கொண்டு அழுக்கை நீக்குவது போலச் சிந்தனையை ஒரு முகப் படுத்துதல் சிந்தனையை அறச் செய்யும் உபாயமே சிவோகம் பாவனையாகும். சிந்தனை விருத்தி நிலையை - விழிப்பு - கனவு - உறக்கம் ஆகிய துரியம் என்றும், இவற்றைக் கடந்த நிலையை மௌன சமாதியாகிய துரி யாதீதம் என்றும் தெளிந்து கொண்டு நாம் நாவுக்கரசர் காட்டிய யோகசாதனையில் ஈடுபடுவோம். சரியையில் யோக சாதனையைக் குறிக்கும் தேவாரம் இதோ:-

*விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்*
*மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்*
*உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்*
*முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே!*


இத்தேவாரத்தின் கடைசி வரியின் முடிவில் வரும் "கடைய முன் நிற்குமே" என்னும் சொற்றொடர் நமது கவனத்துக்குரியதாகும். கடைய என்னும் சொல் விசேடமா கக் குறிப்பது சிவயோக சாதனையாகும். முன்நிற்கும் என்பதன் மறைபொருள் திருவருட் சக்தி தோன்றி முன் நிற்கும் எனக் கொள்ளக் கூடியதாகும். சிவன் உயிருக்கு உயிராகவும் விறகில் நெருப்புப் போலவும் மறையநிற்கின் றான். விறகு கோல்களைக் கடைந்தால் தீயும் முறுகிய பாலைக் கடைந்தால் வெண்ணையும் அவற்றுள் இருந்தே வெளிவந்து நிற்கும். அதேபோல சிவயோக சாதனை செய்தால் அடியார்கள் முன்பு திருவருட் சக்தி உள்ளி ருந்துதோன்றி நிற்கும்.

---

## நல்ல சேகரம்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது சுவாமி அங்கிருந்தவர் களை ஒவ்வொருவராகப் பார்த்து "உன்ர பெயர் என்ன?" "உன்ர பெயர் என்ன?" என்று கேட்டார். திருவாளர் நல்லைநாதன் தன்பெயரைக் கூறினார். யோகர் சுவாமிகள் உடனே "நல்ல நாதன்" ஞானசேகரம் என்று கூறிவிட்டு ஐயாவைக் காட்டி "நல்ல சேகரம்" என்று கூறி "நல்ல" என்பதை அழுத்தி "நல்ல சேகரம்" என்றார். சுவாமி அன்று திருவாளர் ஞானசேகரத் திற்கு எவர்க்கும் கிடைத்தற்கரிய மிகப்பெரிய பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பட்டமளிப்பை வழங்கினார். இது மேடையேற்றி மாலையிட்டு பலரது கரகோஷத்தின் மத்தியில் கொடுக் கப்பட்டதல்ல. அருள் அலைகளும் சிவுனருளும் புனிதத்துவமும் நிறைந்த சிவசன்னதியில் சீவனுக்கு நிகரான முக்காலமுணர்ந்த மாமுனி வனால் அளிக்கப்பட்டபட்டம்.




நாவலர் பெருமானுடைய மாணவனும்
மருகருமாகிய வித்துவசிரோமணி
**திரு.ந.ச.பொன்னம்பலப்பிள்ளை**
சபையினது முதலாவது தலைவர்
(1888–1889)



நாவலர் பெருமானுடைய
தமையனார் மகன்
**திரு த.கைலாயபிள்ளை**
முதல் பத்திராதிபர் (1889–1897)
இந்து சாதனம்
காரியதரிசி



திருவனந்தபுரம் உயர் நீதிபதியாகக்
கடமையாற்றிய
**திரு.தா.செல்லப்பிள்ளை**
(HINDU ORGAN – 1889 – 1891)



1939 சைவப்பிரகாச அச்சியந்திரசாலை ஊழியர்கள் வேலை செய்துகொண்டிருக்கும் போது....

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

# தமிழன் கண்ட முருகன்

*மா. க. ஈழவேந்தன்*

ஏதுக்களால் எடுத்துரைக்க முடி யாதவன் இறைவன்

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கு சோதித்தாலும் எளிதில் அகப்படாதவன் ஆண்டவன். அவனை இன்ன தன்மையன், இந்நிறத்தவன், இவ்வண்ணத்தன் என்று எழுதிக்காட்ட முடியாது. இத்தகைய இறைவனுக்கு ஒரு நாமமோ, உருவமோ இல்லை. எனினும் வாழையடி வாழையாக வந்த அடியார் திருக் கூட்டம் அவனுக்குப் பல பெயர் சூட்டியும் பலவடிவம் அமைத்துமே அமைதியும் உள்ளநிறைவும் பெற்றுள்ளனர். இப்பேருண்மையைத்தான் தேன் கலந்த வாசகம் தந்த வான் கலந்த மணி வாசகர்.



"ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்று பாடி இன்பம் காண்கிறார்.

ஆயிரம் திருநாமம் பாடி அமைதி காண்போம்

ஓர் உருவமோ ஒரு வடிவமோ ஒரு பெயரோ அற்ற இதே இறைவன் தான் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் நோக்குடன் அடியவர்கள் வேண்டும் வடிவில் சூட்டும் பெயரில், காட்சியளித்து அருள்புரிகின்றான். இதை "நானா வித உருவாய் நமையாள்வான்", "பல பல வேடமாகும் பரன்நாரி பாகன்" என்ற தேவாரப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

முருகு உணர்த்தும் பொருள்

எம் ஆண்டவன் பூண்ட வடிவங்களுள் முருகன் வடிவமும் ஒன்றாகும். இந்த வடிவம் தனிச்சிறப்பு வாய்ந்தது. தமிழரின் தனியுடைமையாக அன்றுதொட்டு இன்றுவரை நிலவுகிறது. முருகன் தமிழரின் தனித் தெய்வமாக விளங்குகிறான் என்பதற்கு தமிழகத்தில் முருகன் கோயில்கள் பரவியிருப்பது போல் இந்தியத் துணைக்கண்டத்தின் ஏனைய பகுதிகளில் பரவாதிருப்பது சான்றாய் விளங்குகின்றது. அத்துடன் முருகன் என்ற பெயரும் தூயதமிழ்ப் பெயராகும். இதில் வரும் 'முருகு' எனும் சொல் அழகு, இளமை, தெய்வீகத் தன்மை போன்ற பொருள்களை குறித்து நிற்கிறது. முருகன் என்றும் இளையவனாய், அழகனாய் விளங்குகின்றான் என்பதையே "என்றும் இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே" என்று நக்கீரர் தன் திருமுருகாற்றுப்படையில் நயம்பட நவில்கிறார். அவர் கூற்றிற்கு வழிமொழி கூறுவது போல் "ஆயிர கோடி காமர் அழகெலாம் திரண்டு ஒன்றாக மேயினை எனினும் செவ்வேள் விலாம் சரணம் தன்னில் தூயநல் எழிலுக்கு ஆற்றுது" என்று கச்சியப்பர் தன் கந்தபுராணத்தில் கழலுகிறார்.

முருகனின் ஏனைய செந்தமிழ்ப் பெயர்கள்

மற்றும் முருகனுக்கு வழங்கப்படும் ஏனைய செந்தமிழ்ப் பெயர்களாகிய, வேள், குழகன், வேலன், சேய், சேயோன், ஆறுமுகன், பன்னிருகையன், சேவலங்கொடியோன், மயிலூர்தி, வள்ளிமணாளன், குருபெயர்க்குன்றங்கொன்றோன், சூர்மாத் தடிந்தோன். பிள்ளைப்பெருமாள், நல்லபெருமாள் ஆகிய பெயர்கள் தமிழுக்கும் அவனுக்கும் உள்ள நெருங்கிய உறவை உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றன.

சேர் பொன். அருணாசலம் அறையும் கருத்து

வேறு சொற்களில் விளம்பின் தமிழ்ச் செல்வாக்கு எங்கெங்கெல்லாம் நிலவுகிறதோ அங்கங்கெல்லாம் முருகனுக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டுப் போற்றப்படுகிறான். முருகன் தமிழ் இனத்தின் தமிழ்மொழி யின், தமிழ் இலக்கியத்தின் காவலனாக கனிந்த அன்போடு போற்றிப் புகழப்படுகின் றான். இதை ஈழத்தின் மூத்த தமிழ் அறிஞர்களுள் ஒருவரான சேர் பொன். அருணாசலம் அவர்கள் "The worship of Muruka" எனும் தன் கட்டுரையில் பின்வருமாறு அழகுற ஆணித்தரமாய் எடுத்து மொழிகிறார். **"Wherever Tamil influence prevails he is held in Preeminent honour and dignity. The Tamils regard him as the guardian of their race, language literature and are bound to him by special ties".**

ஐவகை நிலங்களும் ஐவகை தெய்வங்களும்

ஐவகை நிலமாகத் தான் வாழ்ந்த தமிழ் நிலத்தை வகுத்த தமிழன் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு தெய்வத்தை எழுந்தருளச் செய்வதில் இன்பம் கண்டான். அந்த வகையில் குறிஞ்சி நிலக் கடவுளாக முருகனைக் கொண்டான். இந்தக் குறிஞ்சிக் கடவுளுக்கு குறிஞ்சிக் கிழவன், குறிஞ்சிக்குமரன் எனவும் பெயர்கள் இடப்பட்டன.

தொல்காப்பியம் போற்றும் முருகன்

பண்டைத்தமிழர் வாழ்வினை பாங்குடன் பாரிற்கு பறைசாற்றும் ஒல்காப் புகழ்வாய்ந்த தொல்காப்பியம் "சேயோன் மேய மைவரை உலகமும்" என்ற பாடல் வரிவாயிலாக முருகன் புகழ் பாடுகிறது.

சங்கநூல் சாற்றும் முருகன்

எட்டுத் தொகை நூல்களுள் அகநானூறு, ஏழாவது தொகை நூலாக விளங்குகிறது. இந்த நாநூற்றை பாண்டியனின் வேண்டுகோட்கேற்ப பிள்ளைப்பெருமாள் வடிவேற்ற முருகனே தொகுத்தருளினான் என்பது மரபு வழிச் செய்தியாகும். மற்றும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக விளங்கும் எழுபது பாடல்கள் கொண்ட "ஓங்குபரிபாடல்" என்று பாராட்டப் பெற்ற பரிபாடலில் திருமாலுக்கு எட்டுப் பாடலும், காடுகிழான் என்னும் தெய்வத்திற்கு ஒரு பாடலும், வைகையாற்றிற்கு இருபத்தாறு பாடலும், மதுரைக்கு நான்கு பாடலும் ஒதுக்கப்பட்டிருக்க செவ்வேளுக்கு முப்பத்தொரு பாடல் ஒதுக்கப்பட்டடிருப்பது அன்று தமிழகத்தில் முருக வழிபாடு பெற்றிருந்த முதன்மையையும் சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது. மற்றும் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய முதற்செய்யுள் முருகன் புகழ் பாடுவதாகவே அமைந்துள்ளது. பாரதம் பாடிய பெருந்தேவனாரே இதனைப் பாடியுள்ளார்.

சிலம்பும் சிந்தாமணியும் செப்பும் முருகன்

சங்கநூல்கள் முருகன் பெருமையைச் சாற்றுவது போலேயே ஐம்பெரும் காப்பியங்களின் சிறப்புப்பெற்ற சிலப்பதிகாரமும், சீவகசிந்தாமணியும் கூட முருகன் பற்றிய சுவைமிகு குறிப்புகளைத் தருகின்றன. குன்றாடும் குமரன் பற்றியும், அவனின் கைவேல் பற்றியும், குரவைக்கூத்து பற்றியும் சிலம்பு செப்பிநிற்க சீவகசிந்தாமணியின் வீரத்தை முருகப்பெருமான் கிரவுஞ்ச (16ஆம் பக்கம் பார்க்க)

**தமிழன் கண்ட....**

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலையைத் துளைத்ததற்கு உவமித்து உவகை காண்கிறது.

திருமூலர் கண்ட திருமுருகன்

அருள் ஊறும் திருமந்திரம் தந்த திருமூலரும்

"ஆறுமுகத்தில் அதிபதிநான் என்றும்
கூறுசமயக் குருபரன் நான் என்றும்
தேறினர்தெற்குத் திரு அம்பலத்துள்ளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்றானே"

என்ற பாடல் வாயிலாக ஆறுமுகம் தாங்கிய முருகனின் அருட்திறனை எடுத்துக் கூறியதோடு ஆறுமுகத்திற்கும் சிவனுக்கும் பெயரில் வேறுபாடு இருக்கிறதேயன்றி அவர்கள் இருவரும் ஒருவர் தான் என்று கூறிச்செல்கிறார்.

ஞானசம்பந்தர் கண்ட முருகன்

"கருகுழல் மடவார்
கூடிகுறிஞ்சியது பாடி
முருகனது பெருமைபகர்
முதுகுன்று அடைவோமே"

என்று முருகன் புகழ் பாடுவதைக் காண்கிறோம். இது ஞானசம்பந்தர் அவர்கள் தனது திருஇயமகத் தேவாரப் பாடலில் சிவனுக்குப் பல பிள்ளைகள் இருப்பினும் கந்தன் என்னும் முருகனையே செல்லப்பிள்ளையாக கருதி உவகை ஏற்படுத்துகிறான் என்பதை "பெற்றும் உகந்தது கந்தனையே" என்ற வரியின் வாயிலாக எடுத்துச் சொல்லும் கருத்து சுவைமிக்கதாகும்.

நாவுக்கரசர் கண்ட முருகன்

தாண்டகவேந்தர் எனத் தமிழ் உலகம் உவந்து போற்றும் நம் நாவுக்கரசரும் தம் தென்கடம்பைத் திருக்கரக் கோயிற் பதிகத்தில் அவர் முருகனை "நம் கடம்பன்" என்று தனி உரிமை காட்டியிருக்கும் பாங்கு இன்பம் தருவதாகும். இதோ அப்பாடல்:

"நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

நம்பியாரூரன் கண்ட முருகன்

தம்பிரான் தோழராய் விளங்கிய நம் நம்பியாரூரரும் காஞ்சிபுரத்தில் உள்ள திருஓணகாந்தன் தளி எனும் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் இனிய இயல் பைப் பாடுகையில் தனது பின்வரும் பாடலில்,

"திங்கள் தங்கு சடையின் மேலாத்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கையாளேல் வாய்திறவாள்
கணபதியேல் வயிறுதாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவியார் கோற்றட்டி ஆளார்
உங்களுக்கு ஆட்செய்ய மாட்டோம்
ஓண காந்தன் தளி உளீரே"

என்று தீமைகளை அழித்து நன்மைகளை அளிப்பவன் என்பதை ஏற்றமுற எடுத்துக் காட்டுவதைக் காண்கிறோம்.

சேக்கிழார் கண்ட செவ்வேள்

செந்தமிழ்க் காப்பியம் தந்த சேக்கிழார் கூட செவ்வேளின் சிறப்பியல்புக்கு தன் சிந்தையைப் பறிகொடுத்ததினால் சுந்தரர் பற்றி தாம் வரைந்த வரலாற்றில் சுந்தரரின் சுந்தர வடிவைக் கண்டு பரவையார் சொக்கித்திளைத்த காட்சியைப் பின்வரும் முறையில் சுவைபடச் செப்பிச் செல்கிறார்.

முன்னேவந்து எதிர்தோன்றும்
முருகனோ? பெருங்கொளியால்
தன்நேர்இல் மாரனோ?
தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர் செஞ்சடை அண்ணல்
மெய்யருள் பெற் றுடையவனோ?
என்னே! என்மனம் திரிந்த
இவன் யாரோ? எனநினைந்தார்!

இப்பாடலில் வரும் "முன்னே வந்து எதிர்தோன்றும் முருகனோ" என்ற சொற்தொடர் அழகும் இளமையும் மிக்க முருகனோடு ஆரூரர் வடிவம் ஒப்பிடப்படுகின்றதென்பதை உணர்த்தி நிற்கின்றது.

எண்ணிக்கையில் ஏற்றம் பெற்ற முருக அடியார்கள்

தமிழ் கூறும் நல்லுலகில் முருகன் புகழ்பாடிய புலவர்களின் எண்ணிக்கை பல்நூறாகப் பெருகியுள்ளது. அவர்களுள் நக்கீரர், கச்சியப்பர், அருணகிரிநாதர், குமரகுருபரர், சம்பந்தசுணாலயர், சிதம்பரசுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகியோர் எம் எண்ணத்தில் இடம்பெறத்தக்க ஏற்றமிக்க புலவோர் ஆவர்.

தாயுமானாரும் வள்ளலாரும் வாழ்த்திய முருகன்

மற்றும் "கந்தரனுபூதிபெற்றுக் கந்தரனுபூதி சொற்ற எந்தையருள் நாடி இருக்கும் நாள் எந்நாளோ" என்று அருணகிரி புகழ்பாடிய தாயுமானவரும், திருத்தணிகை முருகன் மீதும் சென்னை கந்தகோட்டக்குமரன் மீதும் உள்ளம் உருக்கும் பாடல்கள் பாடிய வடலூர் வள்ளலாரும் எம் நினைவில் என்றும் இருக்கத்தக்கவர்கள்.

அறிஞர் வாழ்த்திய முருகன்

அத்துடன் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி இருபதாம் நூற்றாண்டிலும் வாழ்ந்து மறைந்த "முருகன் அந்தாதி" பாடிய ஞானியார் அடிகளையும் "திருவொற்றி முருகன் மும்மணிக்கோவை" பாடிய மறைமலைஅடிகளாரையும், முருகன் அருள் வேட்டல்" "முருகன் அல்லது அழகு" என்ற பாடல், உரை நூல்களைத்தந்த தமிழ்த் தென்றல் திரு.வி.க.வையும் யாம் மறக்கமுடியாது. இவர்கள் போன்றே "அறிவாகிய கோயிலிலே அருளாகிய தாய்மடிமேல் பொறிவேலுடனே வளர்வாய் அடியார் புதுவாழ்வுறவே புவிமீதருள்வாய் முருகா, முருகா, முருகா" என்று பாடிய பாட்டிற்கொரு புலவன் பாரதியையும் "சுப்பிரமணிய அமுது" பாடிய அவன் தாசன் பாரதிதாசனையும் யாம் என்றும் நினைவில் கொள்ளல் ஏற்புடையது.

ஈழத்துப் புலவர்கள் பாடிய முருகன்

ஈழத்தைப் பொறுத்தவரை தமிழ் வளர்த்த தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் கதிர்காமக்கந்தன் மீதும், கொழும்புத்துறை யோக சுவாமிகள் நல்லூர் கந்தன் மீதும், வித்துவான் வேந்தனார் அதே தெய்வம் மீதும் பாடிய பாடல்கள் நம் நினைவலைகளில் மோதத்தான் செய்கின்றன. மற்றும் ஈழத்துத் தமிழர் வாழ்வில் தனக்கெனத் தனியிடம் பெற்றுள்ள கவிஞர் காசி ஆனந்தன் பாடியுள்ள முருகன் அருள்வேண்டும் பாடல்கள் ஈழத்தமிழ் இலக்கிய உலகில் தனியிடம் பெறுபவையாகும்.

நக்கீரரின் முதன்மை இடம்

முருகன் புகழ் பாடியோரின் பெரும் பட்டியல் மேலே தரப்பட்டிருப்பினும் "முருக இலக்கியத்தை" முதலிற் படைத்த தனிச்சிறப்பை "பொய்யற்ற கீரன்" என்று கச்சியப்ப சிவாச்சாரியரால் புகழ்ந்து பாடப்படும் திருமுருகாற்றுப்படை தந்த நக்கீரர் பெறுகிறார். ஏனைய பிற தெய்வங்கள் பிற தெய்வங்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்கெல்லாம் தங்கள் சேத்திரங்கள் என்று பெயர் பெற முருகன் எழுந்தருளும் இடங்களுக்கு மட்டும் "படைவீடுகள்" என்று பெயர் பெற்றதற்குக் காரணம் முருகன் வீரர்களுக்கெல்லாம் ஒரு பெரு வீரனாக விளங்குவதனாலேயேயாகும். இத்தகைய மாட்சிமை மிக்க நிலையை முதன் முதலில் முருகனுக்கு ஏற்படுத்திய பெருமை நல்லிசைப் புலவர் (17ஆம் பக்கம் பார்க்க)

**தமிழன் கண்ட.....**

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

நக்கீரருக்கே உரியது.

கச்சியப்பர் கண்ட கந்தன்

நக்கீரரின் நல்வழியில் வந்து எண்ணத்தினாலும் எண்ணிக்கை யாலும் ஏற்ற மிக்க அரும் படைப்பாகிய கந்த புராணத்தை எம் உள்ள மெலாம் கொள்ளை கொள்ளும் முறையில் எமக்கு அளித்தவர் காஞ்சிபுரம் தந்த கச்சியப்ப சிவாசாரியர் ஆவர். அவரின் நூலில் திறத்தினை, தெய்வீகத் தன்மையினை இங்கு விரித்துக் கூறின் மிகப் பெருகும் என அஞ்சுவதனால் விடுபட்டுள்ளது. இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குரியவர்.

அருணகிரிநாதர் கண்ட முருகன்

அடுத்து நம் நினைவில் வருபவர் "பாடும்பணியே பணியாய் அருள்வாய்" என்று பாடிய அருணகிரிநாதராவர், பதினைந் தாம் நூற்றாண்டிற்குரிய இவர் பாடிய பாடல்கள் பல்லாயிர மாகும். இவர் பாடிய நூல்களுள் திருப்புகழ், கந்தர் அலங் காரம், கந்தர் அனுபூதி, திருவகுப்பு, கந்தர் அந்தாதி, வேல் விருத்தம் என்பவையாகும். இவற்றுள் பொதுமக்கள் நாவில் நடம் புரியும் புகழைப்பெற்று விளங்கும் நூல் திருப்புகழாகும். பதினாயிரம் திருப்புகழ் பாடல்களை இவர் பாடினார் என்று மரபுவழியாக ஏற்றுக் கொள்ளப்படினும் இன்று எமக்கு ஏறக்குறைய 1250 பாடல்கள் தான் கிடைத்துள்ளன. கிளி கொத்திய பழம் சுவையுடையது என்பதற்கமைய அருண கிரி என்ற கிளி கொத்திய "கந்தர் அனுபூதி" எனும் நூல் தத்துவ உலகில் தனிச் சிறப்புடன் விளங்குகின்றது. சுகப்பிரம்மம் என்னும் கிளி கொத்திய 'பாகவதத்தை' ஒத்த சிறப்பு இதற்குண்டு என்பது ஒப்புநோக்கி ஆய்வாளரின் கருத்தாகும்.

குமரகுருபரர் கண்ட குமரன்

அருணகிரிநாதரையடுத்து முருகன் புகழ் பாடியதனால் தமிழ் இலக்கிய உலகில் தனியிடம் பெற்று விளங்குபவர் குமரகுருபர அடிகளாவர். பதினேழாம் நூற்றாண்டிற்குரிய இவர் பல அரிய படைப்புகளைத் தமிழ் இலக்கிய உல கிற்கு உவந்து அளித்துள்ளார். அவற்றுள் முருகன் புகழ் பாடுபவையாகவும் "திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா" "வைத்தீசுவரன் கோவில்" "முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ்" ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

தமிழனாய்ப் பிறந்த முருகன்

சிவன் சவுந்தர பாண்டியனாகவும், உமை தடாதகாதேவி யாகவும், முருகன் உக்கிர குமாரனாகவும் முறையே மதுரையில் பிறந்தது தமிழின் மீது அவர்களுக்கு இருந்த எல்லை யற்ற காதலே காரணம் என்று பொருள் குறிக்கும் முறையில்-

"தமரநீர்ப் புவனம் முழுது ஒருங்கு ஈன்றான்
தடாதகா தேவி என்று ஒரு பேர்
தரிக்கவந்ததுவும் தனிமுதல் ஒருநீ
சவுந்தர மாறன் ஆனதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்தமிழ் மதுரம்
கூட்டுண எழுந்தவேட்கையால் எனில்இக்
கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார்
பமரம் யாழ்மிற்ற நறவு கொப்பளிக்கும்
பனிமலர்க் குழலியர், பளிக்குப்
பால்நிலா முன்றில் நாநிலா முத்தின்
பந்தரில் கண்இமை ஆடாது
அமரர் நாடியரோடு அம்மானை ஆட
ஐயம்நண் நசுப்பு அள வல என்று
அமரரும் மருளும் தெளிதமிழ்க்கூடல்
அடல்அரா அலங்கல் வேணியனே!"

என்று மதுரைக் கலம்பகத்தில் வரும் பாடல் குமர குருபரரின் எல்லையற்ற தமிழ்ப் பற்றிற்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாய் மிளிர்கிறது.

அருணகிரி கண்ட முருகன்

இறுதியில் தமிழுக்கும் முருகனுக்கும் உள்ள தொடர்பை எடுத்தியம்பி இக்கட்டுரையை முடிப்பது ஏற்புடையது என்று கருதுகின்றேன். தமிழுக்கும் முருகனுக்குமுள்ள தொடர்பை முருக அடியார் இயம்பிய கருத்துக்கள் அனைத்தையும் ஈண்டு எடுத்துப் பெய்தல் இயலாத செயலாகும். எனவே வண்ட மிழால் வைதாரையும் வாழவைப்பவன் முருகன் என்று உறுதி யோடு அறுதியிட்டுக் கூறிய அருணகிரிநாதர் கண்ட அருந்தமிழ் முருகனின் சில இயல்புகளை மட்டும் இங்கு எடுத்தாள விரும்புகின்றேன்.

அகத்தியருக்கு அருந் தமிழ் அறிவுறுத்தியவர்

தமிழுக்கு இலக்கணம் தந்து தமிழை வளம்படுத்தியவர் அகத்திய முனிவர் என்பது மரபுவழியாக எம்மவர் ஏற்றுள்ள செய்தியாகும். இம் மரபு வழிச் செய்தி "தமிழ் எனும் அளப் பரும் சலதி தந்தவன்" அகத்தியன் என்று கம்பர் வாழ்த் தும் வாழ்த்துரையால் மேலும் வலிவு பெறுகிறது. இத்தகைய அரும் புலமை வாய்ந்த அகத்தியருக்கும் அருந்தமிழை ஊட்டியவர் முருகன் என்கிறார் அருணகிரிநாதர்.

இத்தகைய அகத்தியர் சிவனோடு ஒப்பவைத்து எண்ணத் தக்க பெருமை மிக்கவர். அவரின் அகம் மகிழவும் இரு செவிகள் குளிரவும் தமிழ் அறிவை முருகன் அவருக்கு ஊட்டினார் என்பதை,

*"சிவனைநிகர் பொதியவரை*
*முனிவர் அகம்மகிழ இரு*
*செவிகுளிர இனிய தமிழ் ~ பகர்வோனே"*

என்று அருணகிரிநாதர் அகம் குழைந்து பாடுகையில் எம் உள்ளம் உறும் உவகைக்கு எல்லைதான் உண்டோ?

சிவனுக்கு செந்தமிழ் செப்பியவர்

வள்ளி மணவாளனாகிய நம் குமரன் குட முனிவன் செவியில் செந்தமிழ் ஓதியதோடு நிறைவுபெறாத, நிலையில் கொன்றை மலர்மாலை அணிந்த முழுமுதற் பொருளாகிய சிவபெருமானுக்கே - தன்னைப் பெற்ற அப்பனுக்கே கொஞ்சிப் பேசி தமிழின் தகைமையை அறிவித்தார் என்பதை

"கொன்றைச் சடையர்க்கு
ஒன்றைத் தெரியக்
கொஞ்சித்தமிழைப் ~ பகர்வோனே"

என்று மேலும் ஒருபடி சென்று அருணகிரிநாதர் அறை யும் கருத்து எம் நெஞ்சையள்ளும் கருத்தாக ஒளிவிடுகிறது.

இறையனார் அகப்பொருளின் ஆழம் கண்டவர்

அருந்தமிழ் முனி அகத்தியர்க்கும், எம்மையாளும் ஆண் டவனுக்கும் அருந்தமிழின் ஆற்றலை அழகுற எடுத்துக் கூறிய நம் முருகன், பாண்டியன் வளர்த்த பைந்தமிழில் தோன்றிய "இறையனார் அகப்பொருள்" எனும் நூலுக்கு புலவர் பலர் உரை புகன்ற நிலையிலும் உருத்திர சன்மர் என்ற பெயரு டன் தோன்றிய முருகன் இவை அனைத்தையும் தனித் தனியே ஆராய்ந்து இறையனார் அகப் பொருளுக்கு நக்கீரர் நவின்ற உரையே நல்லுரையென முடிந்த முடிபை வழங்கி னார் என்பதை

"வழுதியர் தமிழின் ஒருபொருள் அதனை
வழிபட மொழியும் முருகேசா"

என்று அருணகிரிநாதர் நமக்கு வழங்கும் செய்தி சிந்தை நிறையோடு ஏற்கத்தக்க சிறப்புமிக்க செய்தியாக ஏற்றம் பெற்று விளங்குகிறது.

தமிழில் உயர் சமர்த்தர்

நம் முருகன் அருந்தமிழ்ப் பற்றினால் ஆட்கொள்ளப் பட்டவனாய் விளங்கியதோடு (18ஆம் பக்கம் பார்க்க)

**தமிழன் கண்ட....**

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருந்தமிழ் ஆய்விலும் உயர்ந்து விளங்குகிறான் என்பதை "அலகில் தமிழால் உயர் சமர்த் தனே போற்றி" என்று வெற்றிப் புன்னகையுடன் அருணகிரி நாதர் பாடுவதில் இருந்து அறிகிறோம்.

புலமையும் ஆய்வும் பெற்று ஞானம் ஊறும் செங்கனிவாயுடை முருகனே! நான் நாள்தோறும் செந்தமிழ் நூல்களை ஓதி உய்ய அருள்புரிய வேண்டும் என்பதை

"செந்தமிழ் நாளும் ஓதி
உய்ந்திட ஞானம் ஊறும்
செங்கனி வாயில் ஒருசொல் – அருள்வாயே"

என்று அருணகிரிநாதர் 15ஆம் நூற்றாண்டில் விடுத்த வேண்டுகோள் தன்வாழ்வு வளம் பெறமட்டும் விடுத்த வேண்டுகோள் அல்ல, மாறாகத் தமிழராகிய எம் சார்பிலும் விடுத்த வேண்டுகோள் என்பதை உய்த்து உணர்வோமாக.

தமிழை விரும்பும் முருகன்

ஓசையொளியெல்லாம் நிறைந்த உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவனாய் விளங்குபவன் ஆண்டவன். ஆகவே அவனுக்கு உலகமொழிகள் அனைத்தும் தெரியும். அந்த மொழிகளுள் ஒன்றாகிய தமிழும் அவனுக்குத் தெரியும் என்பது உட்பொருள் தெளிவு. இறைவனுக்குத் தமிழ் தெரியும் என்பதற்கு மேலாக தமிழிலே அவனுக்குத் தனியீடுபாடு ஏன் தீராத காதல் என்று கூடக் கூற முடியும். பழமறைகள் அவனைத் தேடிப் பின்தொடர்கையில் அவன் தமிழைத்தேடி அலைந்தான், ஆராய்ந்தான் என்று தமிழ் அடியார்கள் அறைகின்ற னர். அருள் ஊறும் திருமந்திரம் தந்த திருமூலர் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று தான் மொழிந்துள்ளார். "நம்மை மண்மேல் சொற் றமிழ் பாடுக" என்றுதான் அன்று இறைவன் நம்பியாரூரருக்கு கட்டளையிட்டார் என்று சேக்கிழார் தன் செந்தமிழ்க் காப்பியத்தில் செப்புகிறார். இறைவன் எட்டாம் நூற்றாண்டில் சுந்தரருக்கு இட்ட காலம் கடந்த நிலையில் 21 ஆம் நூற்றாண்டிலாவது நிறைவேற்ற நாம் தயங்கலாமா?

செவ்வேளை செந்தமிழில் வழுத்திடுக

நம் அருணகிரி அவர்கள் கூட முருகன் வடிவு தாங்கிய இறைவனை

"அம்புவி தனக்குள் வளர்
செந்தமிழ் வழுத்தி உனை
அன்பொடு துதிக்க அருள்வாயே"

என்று தான், உள்ளம் குழைந்து வேண்டுகின்றார். இப்பாடலில் வளர் செந்தமிழால் முருகனை வழுத்த அவர் விரும்பினாரேயன்றி வடமொழியால் வழுத்த விரும்பவில்லை என்பது தெற்றெனத் தெரிகிறது. ஆகவே இந்நிலையிலும் எம் அறிவை அடகு வைத்து "கடவுளுக்குத் தமிழ் தெரியுமா?" என்ற பொருள் அற்ற வீண் கேள்வியைக் கேட்காது நம் தம்பிரான் விரும்புவது - நம் தமிழ் முருகன் விரும்புவது உள்ளம் உருக்கும் தமிழ் வழிபாடே என்பதை உய்த்துணர்ந்து இன்பத் தமிழால் இறைவனைப்பாடி அன்பைப் பெருக்க முயற்சி எடுப்போமாக.

தமிழன் தன்னை உணரவேண்டும்

தமிழுக்காக உருகும் ஆண்டவனை - அருந்தமிழ் முருகனை தமிழில் வழிபட்டு உள்ளம் உருகி உய்யும் வழிகாணத் தெரியாத தமிழன் - அரசியல் வானில் அருந் தமிழ் அப்புறப்படுத்தப்பட்டதையிட்டு அங்கலாய்ப்பதில், ஆற்றாது அழுவதில் என்ன பொருள் உண்டு. தமிழன் தன்னை உணராத போது தமிழனுக்கு வாழ்வில்லை. இது பொய்யா மொழி என்பதை மெய்யடியார்கள் உணர்வார்களாக.

வீரம் வேண்டின் வேலவனை வழிபடுக

சுருங்கக் கூறின் வீழ்ச்சியுற்ற தமிழன் எழுச்சியுற - விசை ஒடிந்த தேகத்தில் வன்மை பெற கீழ்ச்செயல்கள் முற்றாக நீங்கிய நிலையில் மேன்மை எண்ணங்களால் எம்வாழ்வை மேம்படுத்த வெற்றி வேலும் ஆறுபடைவீடும் தாங்கிய முருகவேளுக்கு முடிதாழ்த்தி முத்தமிழால் அவனை வழுத்தி முடிவிலா இன்பம் காண்போமாக.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

*



ஆழ ஆய்ந்து தமிழ்
எழுதும் அழகன்!
தாழ வீழ்ந்த தமிழ்
தாங்கு மறவன்!
ஊழை ஓர்ந்து தமிழ்
உதவு தமிழன்!
ஈழவேந்தன் தமிழ்
இனிய தமிழே.

– கவிஞர் காசி ஆனந்தன்.

**தலைவர், இ.மகேந்திரன்**
**சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.**

*இந்து சாதனம் (Hindu Organ) மீண்டும் புத்துயிர் பெறுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி. செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் வாழ்வுகொடுத்தோரின் பணி பதிவேடுகளில் பதியப்படவேண்டும். இந்து சாதனத்தில் பதியப்படும் போது இதயத்தில் இன்பம் பெருக்கெடுக்கிறது. தமிழன் வரலாறு ஆவணப்படுத்தப்பட வேண்டும். எனவே, தங்கள் பணி வெல்கவென வாழ்த்துகிறேன்.*

**- மா.கா.ஈழவேந்தன்.**

THE HINDU ORGAN
SEPTEMBER 2003

# THE SAIVA PARIPAILANA SABHAI: ITS' HISTORY, AIMS AND IDEALS

*By*
**Siva U. Somasegararm M. A., Ed, F. R., Econ, S**
Vice President, Saiva Paripalana Sabha, President, Hindu Institute of Culture & President, Youth Council for Social and Economic Welfare, Jaffna

**(This Article Appeared in our 75th year Meomorial Number 1967)**

It was over seventy five years ago that the Saiva Paripalana Sabhai was inaugurated. As its name implies it was founded for the propagation of the Saiva Siddhanta Faith and for the defence of Saiva interests in Jaffna in particular and Ceylon in general.

Little is known of the state of Saivism during the period of what may be called the military occupation of Ceylon by the British during the first half of the nineteenth century. The Government was inclined to be more liberal and to concede some of the rights of the indigenous population of Ceylon, their religions and their cultures, during the latter half of the century but the Missionaries who had followed the British flag and had built up a religious and cultural hegemony, suppressing the indigenous religions and cultures were loth to part with their powers. Their influence was so great that the battles had to be fought continuously and ground gained almost inch by inch.

The first to start the fight for the religious snd cultural rights of the Saivites of Ceylon was the doughty champion of the Saiva Faith, the late Sri la Sri Arumuga Navalar who has created a tradition of religion culture and literary scholarship, that will last as long as Tamil and Hinduism exist in Ceylon. Brought up in a Christian Missionary atmosphere, he became a master craftsman and challenged them with a fair measure of success in their own ground. His field of work extended to South India also and he was hailed as a Saiva Revivalist and the father of Tamil prose. He had unfurled the flag of revolt against the dominance of Christianity and Western Culture snd the movement gained momentum towards the end of the nineteenth century, it would be of interest to note that this was a phase of British Rule and similar revivalist movements were launched in the Buddhist areas of Ceylon and in India also.

The founders of the Saiva Paripalana Sabhai owed the inspiration to this champion of tfie Saiva religion and

(Continued on page 20)

**The Saiva......**

(Continued on from 19)

Tamil Culture. The flag of revolt unfurled by him had to be held high until final. victory was won and the rights of the Tamils and the Saiva Faith were firmly established in our country.

The nephew of the great Navalar was the first President and after an year he handed over the reins to more doughty fighters who could carry on struggle in a more modern fashion. Mr. T. Chellappapillai B.A., B, L retired Chief Justice of Travancore was the next President and with him were associated Mr.V.Casipillai, Crown Proctor Mr.S.m, Pasupathy Chettiar and towering above them all, Mr. S. Nagalingarm Advocate, Mr. T. Kailasapillai the heir to the Navalar traditions was also in this group. The Sabhai had among its guides and workers a number of legal, political and religious luminaries among the Tamil Saivites, Among them may be mentioned Sir Ponnampalam Ramanathan, Mr. P. Cumaraswamy, Sir A. Kanagasabai, Mr. S. Kandayya Proctor, Sir W. Duraiswamy, Speaker of the State Council, Mr. S. Sivapathasundaram the lucid exponent of Saiva Siddhanta and culture, Mr. A. Ambalavanar Proctor, Adigar A. Naganathar, Mr. A. Thillaiampalam, Mr. R. Sivagurunathar Proctor, and Chairman of the Jaffna Urban Council and the last but not the least Mr. T. Muttusamipillai Barrister at law and Crown Advocate They had sedulously safeguarded the Navalar tradition and though occasionally they had to diverge from the main goals, they had this tradition as their main guide and have so far kept it intact.

The field of work of the Saiva Paripalana Sabhai naturally varied with the times. The Saiva community was evolving both socially and politically and the Sabhai had to vary its scope and methods. Its work might be described under the following heads.

SAIVA RELIGION The Sabhai was founded to 'manage' the Saiva Religion and it had never hesitated to advocate the Saiva Siddhanta in its pure form. There were many phases of the Hindu Revivalist movement The Arya Samaj, the Brama Samaj and the Rama. Krishna cult of Vedantism, did yeoman service in the beginning, Sri Aurobindo, Tagore. Ramana Rishi, Ram Das. Sivananda and others had their impact on Hinduism in our land and are continuing to do so even today, witness the Ramakrishna group and branches of the Divine Life Society. Other Popular movements like the Y.M.H.A the opposite number of the Y.M.C.A. and Y.M.B.A., Saiva Societies and Hindu Associations have sprung up in our land and are doing very useful work, among the younger generation in particular, The Sabhai however as the oldest and, only incorporated society has in duty bound to keep the flag flying of Saiva Siddhanta in its pristine form as expoun ded in the Saiva Agamas and exemplified by the lives of the Saiva Saints. It has to be the final authority on the interpretations of the Saiva Agamas and Saiva Religion Jza and propagate it, perhaps not as the only one that could lead us on to salvation but as the most suitable way of life against the background of our history and tradition, for our community. Tamil scholars and able exponents of Saiva Siddhanta have joined the ranks of the Sabhai and are very ably performing this task.

The next field of work is education. The great Navalar founded schools, but they were few and far between, as against the Mission schools that dominated the scene. The ice was broken but there was still far to go, His efforts to start an English College proved futile against the entrenched interests of the Missions and it was left to the Sabhai, which had in herited his tradition, to found the first big Hindu institution of its kind, the Jaffna

(Continued on page 21)

**The Saiva......**

(Continued on from 20) Hindu College. After a few years, as big financial interests were involved and the Departmental rules required specialised work, this branch of activity was handed over to the Incorporated body, the Board of Directors of the.Jaffna Hindu College a section of the Sabhai. This Board extended its activities by taking under its management a number of affiliated Colleges and Schools and in 1960, when all the schools were taken over by the Government, this Board was the leading educational organisation for the Tamils The Hindu Board of Education which had among its workers many doughty fighters like Sir Ponnambalam Ra - manathan, Sir Wythialinmam Duraiswamy and the present survivor of the tradition known as "Hindu Board" Rajaratnam. also owes its inspiration to the educational work of this Sabhai and was ably supported by it, during the Board's chequered but successful career. Sir Ponnampalam Ramanathan, who created an educational tradition in his own grand and inimitable style, had learnt from the experiences of the Sabhi and probably improved on it,the Sabhai can hence claim to have led the field of high educational traditions in the Saiva style, and ably carried on the tradition of the great Navalar.

This work of the Sabhai has not ceased with the take over in 1960. The management and all the assets of the schools have been taken over by the Government and the Boards may cease to exist, their 'raison d'etre' having disappeared but the onus of fighting for the maintence of the tradition of Saiva Education in our community devolves on the Saiva Paripalana Sabhai which had been responsible for the birth of this movement and had sedulously fostered Saiva traditions in the field of education. In the present state of our political and national existence, the need for a powerful guardian of Saiva Education cannot be challenged. The Government, pulled in various directions by diverse interests and ideologies, may be misled in spite of its good intentions but the Sabhai has the sacred duty of fighting for the continuance of these traditions in our schools. Big onslaughts are made on our religion and culture by various pressure groups and the spectre of communist ideologies is hovering over every part of the world and it requires great courage and vigilance on the part of the Sabhai to face all these odds and save the youth of our community, There are other organisations busy in this field but the Sabhai has to set the right standard for Saiva education.

The next field is social culture and religious revival and the maintenance of the grand traditions of our faith, against the welter of confused ideologies that obtain in the country. The Sabhai is interested in politics only as far as it impinges on religion and the Saiva way of life and for this purpose it would canvas the support of all political parties and carry great weight in the ultimate decisions in the elections. Social reform on the principles of the Saiva Faith and economic regeneration on these lines are among the laudable aims of the Sabhai The Sabhai is fully convinced that the Saiva way of life is the best way for our community and would strive to build up our society on these lines.

The chief organ for the work of the Sabhai is the Hindu Organ and the Inthu Sathanam which is as old as the Sabhai itself and has among its editors and managers a distinguished galaxy of members of the Sabhai. Among its editors were Mr. Chellappapillai the Founder Editor, Mr.A.Cathiravelu, Mr.A.Sabapathy, Mr. M.S.Eliatamby, Mr.M.Sabaretnasinghe, Mr.M.S.Rasaretnam, Mr.V.Nagalingam, Mr.T.Kailasapillai, and Mr.V.T.Sambandhan, They had laboured hard for the propagation of the ideals of

(Continued on page 22)

**The Saiva......**

(Continued on from 21)

the Sabhai and they are no more Mr.T.Muttusamipillai the present President had graced the editorial chair for a few years and the journalistic standards are ably maintained by the present holders Mr.Nama Sivaprakasam, Proctor and Mr.M. Mylvaganam. Among its managers were Mr.T.Kailasapiilai, Mr.S.T.M.P.Sithamparanatha Chettiar, Mr.S. Ambikaipagan, and Mr. S.Adchalingam, who had all worked hard to build up the Press and. the journals, tiding over critical periods Their names will go down to history as great workers in the field of Religion and Social development,

Another branch of activity of the Sabhai is the publication of religious literature and Text books. The Sabhai pioneered this field. The great Navalar himself started a press and published his own books but this was done from Madras. With the passage of time acute competition set in in this field The private sector unfettered by rules and responsibilities and managed by single capitalist individuals was at an advantage, as against the Sabhai in recent times. The Government also has entered the field of publication of text books and is attempting to call the tune. The fight is against odds. Even if school text books are monopolised by Government, the sacred responsibility of setting the standards and the production of books correctly interpreting the Saiva scriptures devolves on the Sabhai and justifies the support of all true lovers of the faith. Considerable initiative tact and managerial abilities are required for this purpose and the Sabhai has in its fold many educationists who could serve it ably in this field.

To summarise, the Sabhai was organised at a time when the Saiva religion and cultural traditions were dying off and the great Navalar, who started the great struggle against odds single handed, had been cut off in his prime Changing the faith and adopting Western cultural patterns were the roads to prosperity and status in that age. Followers were few for the maintenance of our great Saiva traditions and their efforts were often ridiculed as impractical and not to the best interests of the community. Saiva sadhanas were at a discount The fight was started against terrible odds and these fighters should be given credit for their courage and persistence Much water has flown under the bridge since them The Missionary Gods have been dethroned and kept in their proper places. The rights of the Saivites to educate their children in the Saiva way of life and in their own mother tongue, in which they have their sacred literature, has been accepted. Political independence had been followed by the reestablishment of these fundamental rights but the dangers are still not over and so is the work of this Sabhai. New dangers and subtle cultural and religious onslaughts in new forms are in the offing. New patterns of thought and life have to be set up for our community and the Sabhai cannot relax in its work to guide our community and safeguard these hallowed idelogies and traditions which have stood the test of ages. The Sabhai has to adapt itself to the new phases in the struggle. It has many allies in the form. of various types of associations that work in the field as mentioned above. As the oldest among them and as the pioneers in this field with a wealth of experience, it becomes the responsibility of the Sabhai to give the lead, guide and coordinate these activities and make the work effective. Workers and funds are needed and every lover of the community and the Saiva religion should support this great cause, each in his own way. The Sabhai looks for-ward to the future with courage and confidence May the Almighty Ishwara bless the work of this Sabhai and endow it with diligent workers and adequate funds.



இந்திய தமிழக பேரறிஞர் சேக்கிழார் அடிப்பொடி தில்லை ஸ்தானம் கலாநிதி நடராஜா இராமச்சந்திரன் சிறப்புச் சொற் பொழிவின் பின் சபை, நிர்வாக சபை உறுப்பினர்களுடன்

சபையின் முன்பள்ளிக் கூடத்தின் விளையாட்டு விழா




**இந்துசாதனம்**

சைவ பரிபாலன சபையின்
மாதாந்த வெளியீடு

சைவ பரிபாலன சபையினருக்காக
வெளியீடுபவர் : **இ.மகேந்திரன்**
(தலைவர், சைவ பரிபாலன சபை)

அச்சுப்பதிப்பு :
**சைவப்பிரகாச அச்சியந்திரசாலை**
(கணனி அச்சகம்)

முகவரி :
450, கேகேஏஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு :
17.09.2003

☆


## எமது அன்புக்குரிய வாசகர்களே!

1. நாவலர் சைவசமய பிரசாரத்திற்கு மிக முக்கியமாக கொண்டவற்றுள் –

☆ அச்சு இயந்திரசாலை அமைத்தல்

☆ சைவ பத்திரிகை வெளியிடுதல்

☆ சைவ – தமிழ் நூல்கள் வெளியிடுதல்

என்பவை குறிப்பிடத்தக்கவையாகும். அந்த வழியிலே சைவபரிபாலன சபை பெரும்சிரமத்தின் மத்தியில் –

☆ மீண்டும் சைவப் பிரகாச இயந்திரசாலையை நவீன கணனி – ஓவ்செற் இயந்திர வசதிகளுடன் ஆரம்பித்துள்ளது.

☆ சைவ – தமிழ் நூல்களைத் தொடர்ந்து பிரசுரித்து வருகின்றது.

☆ இந்து சாதனம் THE HINDU ORGAN உங்கள் கைகளில்!

இந்துசாதனம் – சந்தாதாரராக வேண்டியது உங்கள் கடமையல்லவா?

வருட சந்தா – ரூபா 150/=

# பிரதோஷ வழிபாடு...



## பிரதோஷ நேரம்

பகலின் முடிவு சந்தியா காலத்தின் ஆரம்பம்... இதுவே பிரதோஷ நேரம் திரயோதசியன்று வரும் இந்த நேரம் சிறப்பாகக் கருதப்படுகிறது. 'சிவன்' என்ற சொல்லிற்கு தூய தன்மையுடையவர் என்ற பொருள் பிரபஞ்ச சக்தி முழுவதையும் தன்வசம் ஒடுக்கிக்கொண்டு சிவபெருமான் ஆனந்த திருநடனமாடும் நேரம் இது. மாலை முழுவதும் நல்ல விளையாட்டு என்று பாரதி சொன்னது சிவனுக்கு பொருத்தம் போல் இருக்கிறது.

**ஆனந்த திருநடனத்திற்குக் காரணம்?**

தேவர்களுக்கும் அசுரர்களுக்குமான போரில் பாற்கடலை கடைந்தபோது ஏற்பட்ட ஆலாகா விஷத்தை சிவன் தொண்டையில் நிறுத்தினார் அல்லவா! 'உலகத்தைக் காத்தருளியதன் பொருட்டு அந்த விஷம் தங்கள் தொண்டையிலேயே ஒரு அடையாளமாக இருக்கட்டும்' என்று தேவர்கள் வேண்டினர். சிவபெருமானும் அதற்கு சம்மதித்து ஒரு நீல மணியைப் போல விஷத்தை தன் கழுத்தில் நிறுத்தினார். தேவர்களையும் இந்த அண்டசராசரங்களையும் அசுரர்களிடமிருந்து காப்பாற்றிய அந்த விஷயம் பெரிய சாதனையல்லவா? அந்த சாதனையும் சந்தோஷமும் அவரை நடனமாட வைத்தது. வீட்டில்கூட கணவரோ அப்பாவோ சந்தோசமாக இருக்கும் நேரத்தில் கேட்டால் எதுவும் கிடைக்கும் என்று கேட்கிறோம் அல்லவா? அதேபோலதான் சிவன் சந்தோஷமாக இருக்கும் அந்த நேரத்தில் பக்தர்கள் கேட்கும் கோரிக்கையும் பிரார்த்தனையும்.

**சரி... நந்தியின் காதுகளில் ஏன் பிரார்த்தனையை தெரிவித்துவிட்டு வருகிறோம் தெரியுமா?**

சிவபெருமான் சந்தியா கால நடனத்தை முன்றே முக்கால் நாழிகை ஆடினார். ஆடி முடிந்ததும் நான் மும்மரமாக இருந்த நேரத்தில் யாரெல்லாம் என்னைச் சந்திக்க வந்தார்கள்... என்று நந்தியிடம் கேட்டாராம். நந்திதேவர், நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களைப் பற்றி அறிக்கை வழங்கியிருக்கிறார். ஆகவே தான் இன்றும் பிரதோஷ காலத்தில் சிவனை வழிபட்டுவிட்டு அப்படியே நந்தியின் காதுகளில் பிரார்த்தனை செய்கிறார்கள். சாஸ்திரப்படி பிரதோஷ காலத்தில் நந்தியையும் சேர்ந்து வணங்கினால்தான் பிரதோஷ தரிசனத்தின் முழுப்பயனும் கிடைக்கிறது.

## பிரதோஷத்தில் பல வகைகள்!

மொத்தம் ஐந்து வகைப் பிரதோஷம் உள்ளது. நித்திய பிரதோஷம், பசஷப் பிரதோஷம், மாசப் பிரதோஷம், மகரப் பிரதோஷம், ப்ரளயப்பிரதோஷம். எல்லாப் பிரதோசங்களிலும் சிவதாண்டனம் உண்டு. சகல ஜீவ ராசிகளும் சிவனைத் தஞ்சமடையும் நேரம் இது.

நோயால் வரும் பயம் எதிரிகளால் ஏற்படும் பயம், ஏழ்மையால் வரும் கலக்கம், முதுமையால் ஏற்படும் மரண பயம்... எல்லாவற்றையும் நீக்குகிறார் பகவான். தான் சந்தோஷப்படும் அந்தப் பிரதோஷ நேரத்தில் எல்லா உயிர்களுக்கும் சந்தோஷத்தை அள்ளிக் கொடுத்து அருள்பாலிக்கிறார்.

## சனிப்பிரதோஷம் மிகவும் சிறப்பு

மகா சிவராத்திரிக்கு முன் வரும் பிரதோக்ஷத்தை மகா பிரதோஷம் என்று அழைக்கின்றனர். சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷம் ஆயிரம் மடங்கு சிறப்பு வாய்ந்தது.

சிவபெருமான் விஷமருந்தி சயனித்து எழுந்தது ஒரு சனிக்கிழமை மாலையில்தான். திருநீலகண்டனாக சந்தியா தாண்டவம் ஆடியதும் சனிக்கிழமையில் தான்!

## பிரதோஷ விரதம்

பிரதோஷ விரதம் (ஒருவேளை மட்டுமே உணவு) தொடங்குபவர்கள் கார்த்திகை அல்லது ஆவணி மாதத்தில் தொடங்குவது நல்லது.



தொடர்ந்து பதினான்கு ஆண்டுகள் பிரதோஷ நாளில் சிவாலயத்தை வலம் வருபவர்கள் 'சாருப பதவி பெற்று சிவ கணங்களாகத் திகழ்வர் என்று புராணங்கள் குறிப்பிடுகின்றன.

பிரதோஷ நேரத்தின் போது கோயிலுக்குச் சென்றால் அங்கு ஒலிக்கும் வேத கோஷங்களும்... அபிசேக ஆராதனைகளும்... 'ஜெய ஜெய சங்கர... ஹர ஹர சங்கர...' முழக்கமும் நம்மை சிலிர்ப்பூட்டும்...! நன்றி : சிநேகிதி



சேரல்: திரு. க. சிவராமலிங்கம்
28. [illegible]
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

இந்துசாதனம்,
450,கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.